₹10

fmpb

# அறைகூவல்

Volume 55 Issue 1 January 2025

"யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார்." யோ. 21:15

## தேவ அன்பில் இன்னும் அதிகமாய்




**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**இனிய 2025 புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

# ஆரம்ப வரிகள்...




ஒவ்வொரு காலையிலும் பெனடிக்டைன் துறவிகள் இருவழி சந்தியில் நிற்பார்கள். ஒரு புதிய துறவி மடத்தில் இணையும்போது, அவர் பொது வாழ்க்கையிலிருந்து விடுப்பட்டு துறவி வாழ்வு வாழ தனது பொது ஆடையிலிருந்து துறவி ஆடைக்கு மாறுவார். ஒரு துறவி தனது ஆடைகளை வைத்திருக்கும் அலமாரிக்கு போய் தனது பழைய ஆடைகளை அணிந்து கொண்டு தனது முந்தைய வாழ்க்கைக்கு திரும்பிச்செல்ல அவருக்கு வாய்ப்பு உண்டு என்பதை அவர் எப்போதும் அறிந்திருந்தார். எனவே அவர் ஒவ்வொரு நாளும் துறவு வாழ்க்கையை மேற்கொள்ள உறுதியான முடிவை எடுக்க அவசியமாயிருந்தது. அவர் இயேசுவை நேசிக்கலாம் (துறவு) அல்லது அவர் விட்டு வந்த தனது பழைய வாழ்வுக்கு திரும்பலாம். அதை அவர் தான் தீர்மானிக்க வேண்டியிருந்தது.

யோவான் 21இல் பேதுருவோடு சில சீடர்கள் ஒரு குழுவாக இரவில் மீன்பிடிக்க திரும்பினார்கள் என வாசிக்கிறோம். அந்த இரவில் பேதுருவின் வாழ்வில் பல தேவைகள் இருந்தன. சரீர, உணர்வு பூர்வ, சமூக, மற்றும் ஆன்மீக தேவைகளை சமாளிக்க அவர்கள் தங்கள் திறமையான மீன்பிடித் தொழிலுக்கு திரும்பினார்கள் (வ. 9,12). பேதுருவின் வாழ்வில் ஒரு திருப்புமுனையை தேவன் ஏற்படுத்தினார். "**அதிகாலையில்**" இயேசு கரையில் நின்று அவர்களுக்காக காத்திருந்து வரவேற்று உணவு அளித்தார். அவர் பேதுருவிடம் இவர்களிலும் அதிகமாய் நீ என்னை நேசிக்கிறாயா? என்று மூன்று முறை கேட்டார். (வ. 15). அதற்கு பேதுரு ஆம் ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்று பதிலளித்தார். அதற்கு இயேசு என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று பேதுருவை பணித்தார். எனவே இந்த உலகில் எதையும் அல்லது யாரையும்விட இயேசுவை நாம் அதிகமாய் நேசிக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார். இயேசுவின் மேலுள்ள அன்பை வெளிப்படுத்த நமது நேரத்தையும், திறமையையும், பொக்கிஷத்தையும் எவ்வாறு முதலீடு செய்கிறோம் என்பது முக்கியம். நாம் யாரை அல்லது எதை அதிகமாக நேசிக்கிறோம் என்பதை இந்த மூன்று விஷயங்களும் வெளிப்படுத்துகின்றன. அன்பு என்பதற்கு நேரம் என்பது மற்றொரு அர்த்தமாகும். நாம் ஒருவரை உண்மையாக நேசித்தால் அவர்களோடு நேரம் செலவிடவும், அவர்களை குறித்து அதிகம் யோசிப்பதும் உண்டு. அதைப்போல் நாம் இயேசு கிறிஸ்துவை நேசித்தோமானால் அவருக்காக நம் நேரங்களை அதிகம் செலவிடுவோம். நமது தாலந்துகள் மூலம் அவரை பிரியப்படுத்தவும், அவருக்கு சேவை செய்யவும் முயல்வோம்.

மத். 4:19இல் நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்று இயேசு அழைத்தார். ஆனால் பேதுரு தனது பழைய வாழ்க்கைக்குத் திரும்பினார். லூக். 16:13இல் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக்கூடாது என்று இயேசு தம் சீடர்களுக்கு ஏற்கனவே போதித்திருந்தார். பேதுருவை மறுபடியுமாக ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்தும் முன், அவருக்கு தன்மீது உள்ள அன்பை மூன்று முறை உறுதிப்படுத்தினார். 1 பேதுரு 5:1-3இல் பேதுரு தன்னுடைய இறுதி மூச்சு வரை தேவன் கொடுத்த இந்த பணியை உண்மையாய் நிறைவேற்றியதை வாசிக்கிறோம். எனவே நாம் இன்று எப்படிப்பட்ட முடிவை எடுத்திருக்கிறோம்? இந்த உலகில் உள்ள எல்லாவற்றையும் விட இயேசுவை நேசிப்பதற்கு தயாராக இருக்கிறோமா?

- **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

...“உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக’ என்று எழுதியிருக்கிறது என்றான்.”
*லூக். 10:27*

**கிறிஸ்துவைவிட அதிகமாய் யாரையும் அல்லது எதையும் நேசிக்காமல் இருப்பதே சீஷனாய் இருப்பதற்கான அடிப்படை. உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை நீங்கள் முழுமையாக வாழ விரும்பினால் யாரையும் அல்லது எதையும்விட இயேசுவையே அதிகமாய் நேசியுங்கள்.**
*– கிரெக் லவ்ரே*

“உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.” *1 யோ. 2:15.*

**தேவனைவிட அதிகமாய் நீங்கள் எதை நேசித்தாலும், எதற்கு அஞ்சினாலும், எவ்வித சேவை செய்தாலும் அல்லது எதை மதித்தாலும் அதுவே விக்கிரகம்.**
*– அட்ரியன் ரோஜர்ஸ்*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

**அறைகூவல்**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*




# பொதுச்செயலாளரிடமிருந்து...

சந்திக்கப்படாத மக்களை சந்திக்கும் இயக்கத்தின் அன்பு பங்காளர்களே!

2025ஆம் ஆண்டு ஒரு அசீர்வதிக்கப் பட்ட, கிறிஸ்துவை மையப்படுத்தின ஆண்டாக அமைய நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுச் செயலாளராக உங்களை வாழ்த்துகிறேன், உங்களுக்காக ஜெபிக்கின்றேன். நம் இயக்கத்தின் மீதும், நமது ஊழியர்கள்,ஜெபக்குழு உறுப்பினர்கள், நலம் விரும்பிகள் அனைவர் மீதும் அருளப்பட்ட அசீர்வாதங்களுக்காக, சரீர சுகங்களுக்காக சர்வ வல்ல தேவனுக்கு மகிமையும் கனமும் செலுத்துகின்றோம். இந்த புதிய வருடத்தின் ஆரம்பத்தில் இருக்கும் நாம் 2024ஆம் ஆண்டை திரும்பிப்பார்க்கும் போது நாம் இன்று வாழ்வது தேவனுடைய மகா கிருபை என்று உணர்கிறோம். 2024ஆம் ஆண்டில் நமக்கு தேவையான அனைத்தையும் அருளி, பாதுகாப்பையும் கொடுத்து, நம்மை நினைத்தருளின நம்முடைய ஆண்டவரை நன்றி நிறைந்த மனதுடன் துதித்து, நம் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்வோம்.

யோவான் 21:15 லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ‘‘**இவைகளிலும் அதிகமாய்**’’ என்ற வசனத்தை இந்த 2025ஆம் ஆண்டின் மையப்பொருளாக தேவன் தந்திருக்கிறார். இயேசு சீமோனிடம் கேட்கிறார் “சீமோனே, யோனாவின் குமாரனே, இவைகளைவிட நீ என்னை அதிகமாக நேசிக்கிறாயா?’’ எல்லா பொருட்களைவிட, மனிதர்களைவிட அதிகமாக நீ என்னை நேசிக்கிறாயா? என்பது 2025ஆம் வருடத்தில் நமது இயக்கத்தின் அடிநாதமாக மாறியிருக்கிறது. நாம் கிறிஸ்துவை மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் அதிகமாக நேசித்தால் மட்டுமே நம் தேசம் சந்திக்கப்பட இயலும், இயேசுவை முழுமையாக நேசிக்கும் ஒருவரால், நற்செய்தி அறிவிக்கப்படாமல் இருக்கிற சக இந்தியர்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி கூறாமல் இருக்க முடியாது. நம்முடைய சக மனிதர்களின் ஆத்தும மீட்புக்காக ஆண்டவரின் கிருபாசனத்தண்டையில் நம் இருதயங்களை ஊற்றுவோமாக!

## அனுபவம் வாய்ந்த மூத்த ஊழியர் ஆண்டவரடி சேர்ந்தார்

மனிதவள மேம்பாட்டுத்துறை செயலர் அருட்திரு. வி.பி. ஜெபராஜ் மற்றும் திருச்சி முன்னேற்றப்பணி ஊழியர் திருமதி. ஜெயசெல்வி மணிமாறன் அவர்களின் தாயார் திருமதி. வெள்ளையம்மாள் கடந்த 03.12.2024 அன்று தன் 84வது வயதில் உலக வாழ்வினை முடித்துக்கொண்டு தேவராஜ்யம் அடைந்தார். குடும்பத்தாரின் ஆறுதலுக்காக ஜெபிக்கின்ற வேளையிலே திரு. பாக்கியமுத்து அண்ணன் அவர்களுக்காக ஜெபிக்கவும் உங்களை பட்சமாய் கேட்டுக்கொள்கிறேன்.

## ஊழிய ஆலோசனைக் கூட்டம்

8வது ஊழிய ஆலோசனைக் கூட்டம் நவம்பர் மாதம் 23 மற்றும் 24ஆம் தேதிகளில் சென்னையில் வைத்து நடைபெற்றது. பிராந்திய அளவிலான செயல்பாடுகள் சீர்தூக்கி பார்க்கப்பட்டு, தேவையான திருத்தங்களும், மாற்று வழிகளிலும் பரிந்துரைக்கப்பட்டன.

## UCPI ஆலோசனை கூட்டம்

நவம்பர் 27 மற்றும் 28ஆம் தேதிகளில் ஒருங்கிணைந்த இந்திய ஜெபக்குழுவின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. ஊழியத்தை இன்னும் திறம்பட

செய்யும்படியான வாய்ப்புகள் பற்றி ஆலோசனை செய்யப்பட்டது.

### சென்னை பாடியில் கிறிஸ்துமஸ் கீதபவனி

நவம்பர் 28ஆம் தேதி சென்னை பாடி பகுதியில் நடந்த கீதபவனியில் கலந்து கொள்ளும் சிலாக்கியம் எனக்கு கிடைத்தது. நம் ஜெபக்குழு தலைவர்களும், அங்கத்தினர்களும் வீடுவீடாக சென்று மக்களை சந்தித்து, ஊழியர்களுக்கு கிறிஸ்துமஸ் கால வெகுமதிகள் வழங்க ஆதரவு திரட்டுவது மிகவும் பாராட்டக்கூடிய காரியம். கீதபவனியில் சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை பங்குகொள்கின்றனர். வாலிபர்களுக்கு இந்த தரிசனத்தை கொடுக்கக்கூடிய நிகழ்வுக்காக, அவர்களின் பெற்றோர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். ஒவ்வொரு வருடமும் நம் ஜெபக்குழு தலைவர்கள் மழையையும், குளிரையும் பொருட்படுத்தாது, வீடுகளை சென்று சந்திக்கின்றனர்.

### மண்டல செயலர்கள் கூட்டம்

மண்டல செயலர்கள் கூட்டம் டிசம்பர் 1ஆம் தேதி முதல் 4ஆம் தேதி வரை பெரியமலையில் நடைபெற்றது. இரண்டு நாட்கள் உபவாச ஜெபமும், இரண்டு நாட்கள் திட்டக் கூடுகையாகவும் நடைபெற்ற கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

### தமிழ் நாடு சபை (ஒருங்கிணைந்த சபை) கூட்டம்

தமிழ் நாட்டிலுள்ள சில ஆலோசனை கூட்ட தலைவர்கள் என்னை பெரியமலையில் சந்தித்தனர். ஒரு சிறு கூட்டமாக அவர்களே ஆதரவு திரட்டி மூன்று நாள் வாலிபர் முகாம் நடத்தி முடித்துள்ளனர். இந்த ஆச்சரியமான காரியத்திற்காக தேவனைத் துதிக்கிறேன்.

### ஜார்கண்ட் மாநில விஜயம்

நவம்பர் 8 முதல் 15 வரை மால்தோ, ஓராவன், ஹோ, தாஸ் மற்றும் சந்தால் இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் நமது ஊழியர் குடும்பங்களை சந்திக்க தேவன் கிருபை பாராட்டினார். இந்த சந்திப்பானது ஊழிய காரியங்களையும், ஆசீர்வாதங்களையும் பகிர்ந்துகொள்ளவும் மிகவும் பேருதவியாக இருந்தது.

### குருத்துவ அபிஷேக நிகழ்ச்சி

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஆதரவு தந்துகொண்டிருக்கிற வடக்கு இவாஞ்சலிகல் லுத்தரன் திருச்சபை நிர்வாகத்திற்காக தேவனைத் துதிக்கிறேன். டிசம்பர் 11ஆம் தேதி நம் ஊழியர்கள் 44 பேர் NELC பிரதம பேராயர் மற்றும் தும்கா திருமண்டல பேராயர் அவர்களால் குருத்துவ அபிஷேகம் செய்யப்பட்டனர். இந்த குருத்துவ அபிஷேகம் நமது ஊழியர்களுக்கு புதிய சபைகளில் ஊழியத்தை எடுத்துச்செல்ல உதவியாக இருக்கும்.

**ஜனவரி மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்**

- ஜனவரி மாதம் 2ஆம் தேதிகளில் நிர்வாக குழு கூட்டம் நடக்கவிருக்கிறது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செயலர்களின் பயிற்சி கூட்டம் நாக்பூர் நகரத்தில் ஜனவரி 21 முதல் 23 வரை நடக்கவிருக்கிறது.
- ஜனவரி 25 மற்றும் 26ஆம் தேதிகளில் செங்கல்பட்டு, வல்லம் பகுதியில் நடைபெறும் கூடுகையில் பேசவிருக்கிறேன்.
- ஜனவரி 31ஆம் தேதி மத்திய இந்தியாவில் பணிபுரியும் ஊழியர்களுக்கான மாற்று கலாச்சாரம் கடந்த தொடர்பு பயிற்சி நடக்கவிருக்கிறது.

2024ஆம் வருடம் முழுவதும் நீங்கள் அருளிய ஆதரவு, பொருளுதவி, ஜெபம் ஆகியவைகளுக்காக மிகவும் நன்றி கூறுகிறேன். இந்த 2025ஆம் ஆண்டும் உங்களை எங்கள் ஜெபத்திலே நினைத்துக் கொள்கிறோம். இவைகளைவிட அதிகமாக தேவனிடத்தில் அன்பு கூறுவோம் என்பதனை உறுதி ஏற்போம். தேவன் உங்களோடு இருப்பாராக!

தேவ ஊழியத்தில் உங்கள் உடன் ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

# இயக்கத் தலைவரின்

# கடிதம்



அன்பார்ந்த சகோதர / சகோதரிகளே,

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைமைப் பொறுப்பினை ஏற்கும்படி என்னை இந்த அருட்பணிக்கு தேர்ந்தெடுத்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். செயற்குழு அங்கத்தினர்களுடன் இந்தப்பணியில் பரிசுத்தத்தோடும், உண்மையோடும், நேர்மையோடும், தேவனுக்கு முன்பாக தாழ்மையோடு பணி செய்யும்படிக்கு எனக்காக ஜெபிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு கர்த்தரின் தூண்டுதலால் நம் தேசம் ஆசீர்வதிக்கப்பட துவங்கப்பட்ட இயக்கம். நம் தேசம் ஆசீர்வதிக்கப்பட நாம் அனைவரும் முழு அர்ப்பணிப்போடு இந்த அருட்பணி இயக்கத்தில் ஈடுபடவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். “கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமுமாகத் தெரிந்துக்கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது” என்று சங். 33:12 மிகத்தெளிவாக கூறுகிறது. நமது இந்திய தேசம் ஆசீர்வாதமும், செழிப்புமான நாடாக மாற வேண்டுமானால் கர்த்தரையும், கர்த்தரின் மதிப்பீடுகளையும் மற்றும் கர்த்தரின் போதனைகளையும் நமது தேசத்தின் எல்லை எங்கும் கொண்டு செல்ல வேண்டும். இதற்காக நாம் அன்பால் உந்தப்பட்டு ஜெபிப்பதோடு இந்த ஊழியத்தில் தியாகத்தோடு ஈடுபாடுகொள்ள வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

சில மாதங்களுக்கு முன்பு லூசானே ஐக்கியம் (Lausanne Congress) மூலம் தென் கொரியாவில் நடைபெற்ற ஒரு கூடுகைக்கு நான் சென்றிருந்தேன். உலகம் முழுவதிலுமிருந்து சுமார் 5000 தலைவர்கள் அங்கே கூடியிருந்தனர். அந்த கூடுகையின்போது, தென் கொரியாவைச் சேர்ந்த தலைவர்கள் தங்கள் தேசத்தின் சரித்திரத்தைப் பற்றிப் பகிர்ந்து கொண்டனர். இரண்டாம் உலகப் போருக்குப்பின்னர், கொரியா தேசம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு வட கொரியா மற்றும் தென் கொரியா என்று இரு நாடுகளாயின. கொரியாவின் சிறந்த நிலப்பரப்பு மற்றும் தொழிற்சாலைகள் வடகொரியாவில் இருந்தாலும் அங்கு எதிர்ப் பார்த்த முன்னேற்றம் இல்லை. மறுபுறம் கிறிஸ்தவ மதிப்பீட்டுக்கு அர்ப்பணித்த தென் கொரியா குறுகியகாலத்தில் வளர்ச்சியடைந்து, உயர் வருமானமுள்ள நாடாக மாறியுள்ளது. 1901இல் கொரியாவின் மக்கள் தொகையில் 1% மட்டுமே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் இருந்தனர். ஆனால் இன்று அங்கு 29% கிறிஸ்தவர்கள் உள்ளனர். தேவ இராஜ்யத்தின் மதிப்பீட்டை எந்த நாடு ஏற்றுக்கொள்கிறதோ அந்த நாடே உயர்வும், ஆசீர்வாதமும் பெறமுடியும்.

புதிய ஆண்டிற்குள் பிரவேசித்திருக்கிற நாம், நம்முடைய தனிப்பட்ட வளர்ச்சிக்கும் நம் இயக்கத்தின் வளர்ச்சிக்கும் ஏதுவாக, மூன்று முக்கிய தத்துவங்களை உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன்.

## 1. தரிசனம் இல்லையெனில் முன்னேற்றம் இல்லை

தரிசனம் இல்லாத இடத்தில் முன்னேற்றத்தை எதிர்ப்பார்க்க இயலாது. 'தரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்' என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. தரிசனம் இல்லாத இயக்கங்கள் மந்தமான மற்றும் உத்வேகம் இல்லாமல் பணிசெய்யும் சூழற்சியில் சிக்கிக்கொள்ளும். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரிகள், தலைவர்கள் மற்றும் ஜெபக்குழு அங்கத்தினர்கள் பரலோக இராஜ்யத்தின் தரிசனத்தைப் பெற்றவர்களாக, சிறப்பான வற்றிற்கு நேராக எல்லா நிலைகளிலும் முன்னேற வேண்டுமென்று கர்த்தர் விரும்புகின்றார்.

பாபிலோன் ராஜா தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோரிடம் உரையாடியபோது, அவர்கள் மற்றவர் களைவிட ஞானத்திலும், அறிவிலும், எழுத்திலும் 10 மடங்கு சமர்த்தராக விளங்கினர் (தானி. 1:19-20). தேவனே அதை அவர்களுக்கு அருளினார். கர்த்தருடைய பிள்ளைகள் 10 மடங்கு மேலானவர்களாக விளங்க வேண்டும்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தரிசனம்/ வாஞ்சை என்ன? அடுத்த 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள், 20 ஆண்டுகளில் நாம் என்னச் சாதிக்க விரும்புகின்றோம்? பல புதிய மக்கள் கூட்டத்தில் பணித்தளம் அமைத்து ஊழியத்தை விரிவாக்கம் செய்ய கர்த்தர் நமக்கு மாபெரும் தரிசனத்தைத் தந்தருள்வாராக. அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள கர்த்தர் நம் மனக்கண்களை திறந்திடுவாராக! அடுத்த 5 ஆண்டுகளில் 1000 மிஷனெரி களை உருவாக்க வேண்டும் என்ற தரிசனத்தை நம்முடைய தலைவர்களுக்கு கர்த்தர் கொடுத்துள்ளார். நாடு முழுவதி லுமிருந்து அர்ப்பணம் மிக்க முழுநேர ஊழியர்கள், மிஷனெரி மருத்துவர்கள், மிஷனெரி ஆசிரியர்கள், மிஷனெரி பொறியாளர்கள், மிஷனெரி தொழில் அதிபர்கள் மற்றும் கிறிஸ்தவ அரசு அதிகாரிகள் ஆகியோரைக் கர்த்தர் நமக்குத் தந்தருள வேண்டுமென்று ஜெபிப்போம். ஆயிரக்கணக்கில் தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும், மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும், பழங்குடி மக்கள் மற்றும் பின்தங்கிய மக்களுக்கு சமூதாய மேம்பாட்டை அளித்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும். இம்மாபெரும் ஊழியத்தை நிறைவேற்ற நாம், நமது திருச்சபை மற்றும் பிற அருட்பணி இயக்கங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

பணித்தளம், முன்னேற்றப்பணி மற்றும் தலைமைச் செயலகம் ஆகியவற்றில் மாபெறும் முன்னேற்றம் அடைய பெரிய தரிசனத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். நம்முடன் ஆயிரக்கணக்கில் இளைஞர்களும், பெண்களும் இணைந்து ஊழியம் செய்ய வேண்டும் என்ற தரிசனத்தை உரித்தாக்குவோம். கிராமங்கள், பட்டணங்கள், குடும்பங்கள் மற்றும் திருச்சபைகளில் தேசத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபிக்கக் கூடிய ஆயிரக்கணக்கான ஜெபக்குழுக்களை உருவாக்கவேண்டுமென்ற தரிசனத்தோடு உழைப்போம். நீதிமான் செய்யும் ஊக்க மான வேண்டுதல் மிகவும் பெலனுள்ள தாயிருக்கிறது (யாக். 5:16).

## 2. தனி வாழ்வில் வெற்றி இல்லாமல் பொது வாழ்வில் வெற்றியில்லை

எவரின் தனிப்பட்ட வாழ்வில் வெற்றி யில்லையோ அவரின் பொது வாழ்வில்

வெற்றியை எதிர்பார்க்க இயலாது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நம் நாட்டில் பெரிய மாற்றத்தை உண்டாக்கவேண்டுமென்றால், நாம் ஒவ்வொருவரும் நேர்மையாகவும், தாழ்மையாகவும் வாழ வேண்டும். நாம் நமது தனிப்பட்ட வாழ்வில் பரிசுத்தத்துடன் வாழவும், நம் வாழ்க்கை மற்றவர்களுக்கு முன் மாதிரியான வாழ்க்கையாக மாறவும் ஜெபிப்போம். தனி ஜெபம், வேதத்தின் மூலம் கர்த்தரை அறிந்துக்கொள்ளுதல், வாக்குறுதிகளை நிறைவேற்றுதல், எதிரிகளை நேசித்தல் இவ்விதங்களில் பொது வாழ்வில் நாம் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர், ஜெபக்குழு அங்கத்தினர், குழுத் தலைவர், மிஷனெரி ஆகிய ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்விலும் வெற்றி மிக அவசியம். நமக்கு கொடுக்கப்பட்ட பணிகளை நன்னெறிகளோடு சிறப்பாக செய்யும் ஆற்றலைப் பெற்றுகொள்வதே தனிப்பட்ட வாழ்வின் வெற்றி.

சங்கீதம் 15இல் உள்ளதுபோல நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நடத்தையில் மிக உயர்ந்த பண்புடையவர்களாக இருக்க வேண்டும். எப்பொழுதும் சரியானதை செய்து, பிறரிடம் மரியாதையையும், இரக்கத்தையும் காட்டுகிறவர்களாக வாழ தேவன் நம்மை அழைக்கிறார். நாம் பிறரை மகிழ்ச்சியோடு சந்திக்காமல், அவர்களுக்கெதிராய் மனதில் பகை உணர்வைக் கொண்டிருப்போமானால் நாம் நமது தனிப்பட்ட வாழ்வில் வெற்றியைப் பெறவில்லை என்று அர்த்தம். நமது துணைவர் / துணைவியர், பிள்ளைகள், உறவினர் ஆகியோரிடம் அன்பற்ற, வெறுப்பான வார்த்தைகளைப் பயன்படுத்தினால் நம் தனிப்பட்ட வாழ்வில் வெற்றியை பெறவில்லையென்று அர்த்தம். நாம் குற்றமற்ற வாழ்க்கை வழாவிடில் நமது தனிப்பட்ட வாழ்வில் வெற்றிபெறவில்லை என்பது பொருள்.

நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் வெற்றி இல்லை என்றால், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிலும் வெற்றியைக் காண இயலாது. நான் முன்பு அரசுப் பணியிலிருந்தபோது மிக முக்கியமான வேலைகளைச் செய்வதற்கு முன் என் தனிப்பட்ட வாழ்வில் முழங்கால்படியிட்டு, உபவாசித்து, ஜெபித்து செயல்பட்டதால் என்னுடைய பொது வாழ்வில் வெற்றியை கண்டடைந்தேன்.

### 3. தியாகமில்லாமல் ஆதாயம் இல்லை

நாம் தியாகம் செய்யாவிட்டால் நமது தேசம் ஆசீர்வதிக்கப்பட நாம் எடுக்கும் எந்த முயற்சியிலும் முன்னேற்றத்தைக் காணமுடியாது. காந்திஜி மற்றும் ஆயிரக்கணக்கான சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தால் மட்டுமே இந்தியா சுதந்திரத்தைப் பெற்றது. மிஷனெரிகள் தங்கள் குடும்பத்தையும், உறவினர்களையும் விட்டு, தூர இடத்திலுள்ள பணித்தளங்களுக்குச் செல்வதற்காக பெரும் தியாகங்களைச் செய்தனர். நற்செய்தியை அறிவிப்பதற்காகத் தங்கள் முழு வாழ்வையும் தேவனுக்கு முதலீடு செய்துள்ள அவர்களுடைய அர்ப்பணம் மற்றும் தியாகமான வாழ்க்கைக்காக நாம் எப்போதும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

நம்மில் பலர் சிறிதாகவோ, பெரிதாகவோ செய்யும் தியாகம் நம் நாட்டில் பலர் ஆசீர்வதிக்கப்பட காரணமாக உள்ளது. கொடுப்பது ஒரு ஆசீர்வாதம், கொடுத்தல் ஒரு புனிதமானது. நாம் கொடுப்பத்தினால் பிறர் மகிழ்ச்சி அடைகின்றனர். எனவே இன்னும் அதிகமான குடும்பங்களும், திருச்சபைகளும், ஊழியத்துக்காகக் கொடுக்க முன்வரவேண்டும் என்று வாஞ்சிக்கிறோம். தியாகம் இல்லாமல் ஆசீர்வாதம் இல்லை.

இந்திய அரசாங்கம் பட்டியலின மக்களில் 75 பழங்குடியின மக்கள் மிகவும் பின்தங்கிய மற்றும் அதிகம் பாதிக்கப்படக் கூடியவர்களாக அடையாளம் கண்டுள்ளது. இவர்களில் பலர் இன்றைய நாகரீகத்தைப் பார்த்ததே கிடையாது. விவசாயத்தில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்பங்களை இவர்கள் கண்டதில்லை. குறைவான எழுத்தறிவு, பொருளாதாரப் பின்னிலை, மக்கள் தொகையில் பின்னடைவு ஆகியவை இவர்களிடம் காணப்படுகின்றன.

இவர்களில் பலர் அடர்ந்த காடுகளின் நடுவே வாழ்கின்றனர், இவர்களுக்கு மின்சார வசதி, நவநாகரீகம், பள்ளிக் கூடம், தொலைத் தொடர்பு சாதனம், சாலை வசதி ஆகியவை எதுவும் இல்லை. இவ்வித தேவையோடு இருப்பவர்களுக்கு மிஷனெரி இயக்கங்களும், திருச்சபைகளும் தங்கள் ஊழியத்தின் மூலம் இவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம், நம்பிக்கை, மகிழ்ச்சி, சமாதானம் ஆகியவற்றை கொண்டு வரவேண்டும். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இயக்கத்தின் அழைப்பு இதுவேயாகும். கர்த்தரின் பிள்ளைகளுக்கும் இதற்காக அழைக்கப்படுகிறார்கள்.

## கர்த்தருக்கு நன்றி

நமது இயக்கத்தின் பொறுப்பாளர்கள், செயற்குழு அங்கத்தினர்களோடு இணைந்து நமது இயக்கத்தை உன்னத பண்பு மற்றும் திறன்களோடு அழியும் மக்களுக்காக மனதுருக்கத்தோடும், உன்னத தரிசனத் தோடும் முன்னேடுத்துச் செல்ல அர்ப்பணித் துள்ளோம். நமது மிஷனெரிகள், தரிசன விரிவாக்க ஊழியர்கள், ஜெபக்குழுத் தலைவர்கள் மற்றும் ஜெபக்குழு அங்கத்தினர்களான உங்களை உண்மையுடனும், மனத்தெளிவுடனும், தைரியத்துடனும், பரிசுத்தத்தோடு, நேர்மையுடன் இயேசு கிறிஸ்துவுக்காக எழுந்து நிற்க உற்சாகப்படுத்திகிறோம்.

இந்த இயக்கத்தில் உங்கள் ஒவ்வொருவரின் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புக்காக நான் கர்த்தருக்கு நன்றி செலுத்துகின்றேன். நம்மில் பலர் நம் இயக்கத்தைக் குறித்து உயர்ந்த அபிப்பிராயம் கொண்டிருக்கிறோம். அதே வேளையில் நம் இயக்கத்தின் நிர்வாகத்திடமும் அதிக எதிர்ப்பார்போடு இருக்கும் ஒவ்வொருவருக்கும் நமது இயக்கம் எல்லா நிர்வாக காரியங்களிலும் உயர்வான வரையறையோடு செயல்படும் என்று உறுதியளிக்கிறோம்.

நம் இயக்கத்தை இன்னும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதற்காக உங்கள் ஜெபங்களையும், ஆலோசனைகளையும், உதவிகளையும் எதிர்பார்க்கின்றோம். இவைகளை குறித்து நீங்கள் president@fmpb.org, vicepresident@fmpb.org அல்லது treasurer@fmpb.org ஆகிய மின்னஞ்சல் மூலம் எங்களுக்கு தெரியப்படுத்தலாம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து கர்த்தருக்காக பெரிய, அருமையான பணியை நிறைவேற்றுவோம். இது கர்த்தரின் ஊழியம். எனவே கர்த்தரின் ஊழியத்தில் கவனத்தோடும், உண்மை யோடும் செயல்படுவோம்.

கர்த்தருக்கென்று பெரிதான, சிறப்பான காரியங்களை நாம் செய்ய எத்தனிக்கும் போது தேவன் நம்மீது இரக்கமாயிருந்து, தம்முடைய கிருபையும், ஆசீர்வாதத்தையும் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் அபரிதமாய் பொழிந்தருளி நாம் மகிழ் கொண்டாடத்தக்கதாய் பூரண வாழ்வை தந்தருளி நம் ஒவ்வொருவருக்கும் இப்புத்தாண்டில் கிருபை செய்வாராக!

*கர்த்தர் உங்களையும்,*
*உங்கள் குடும்பங்களையும்,*
*நம் இயக்கத்தையும் ஆசீர்வதிப்பாராக.*

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர்
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# இவர்களிலும் அதிகமாய்

புதிய வருடத்தின் துவக்கத்தில் நின்று கொண்டு 2024ஆம் வருடத்தை திரும்பிப் பார்க்கும்போது, நம் கண்ணின் ஓரத்தில் கசியும் ஈரம், கர்த்தரின் உண்மைத்துவத்தையும், நன்மையையும் நினைவுப்படுத்துகிறது. ஒரு தகப்பன் தன் பிள்ளையை சுமப்பதுபோன்று கடந்த வருடம் முழுவதும் தேவன் நம்மை சுமந்துவந்தார். அவர் நமது முழுமையான கீழ்படிதலுக்கும், என்றென்றும் மாறா முதல் அன்பிற்கும் தகுதியானவர். கர்த்தரின் பிரசன்னமும், பாதுகாப்பும் 2025 வருடமும் அதின் பின்பும் நமக்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.




இவர்களிலும் அதிகமாய் என்னை நேசிக்கின்றாயா? என்ற கேள்வியானது கர்த்தர் மீது பேதுருவுக்கு இருந்த அன்பு மற்றும் அர்ப்பணத்தின் ஆழம் ஆகியவைகளை அறிந்துகொள்ள கேட்கப்பட்டதாகும். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை முகமுகமாய் தரிசித்த பேதுரு, “நான் உன்னை மனிதர்களை பிடிக்கிறவனாக மாற்றுவேன்'' என்று வாக்குரைக்கப்பட்ட பேதுரு அவனுடைய அழைப்பிலிருந்து திரும்பினபோது இந்த கேள்வி தேவையான ஒன்றாக இருந்தது. பேதுரு மாத்திரமல்ல பிற ஆறு சீஷர்களும் பினவாங்கிச் செல்ல அவன் காரணமானான். இயேசு கிறிஸ்துவின் விசாரனையின் போது, பேதுரு அவரை மறுதலித்து பின்பு மனம் கசந்து அழுதான். ஆனால் கிறிஸ்து உயிர்தெழுந்ததினை பார்த்தப் பின்பும், அவனுடைய அழைப்பினையும், பணியையும் விட்டு பின்வாங்கி சென்றுவிட்டான். ஆனால் தேவன் பேதுருவை அப்படியே விட்டுவிடவில்லை. அவனை மீண்டும் எழுப்பிக்கட்ட, அவன் மீன் பிடித்துக்கொண்டிருந்த இடத்திற்கே போகிறார். மறுசீரமைப்பு மற்றும் மீண்டும் கட்டப்படுதல் நமக்கு தேவையாக இருக்கிறது என்பதனை பேதுருவின் வீழ்ச்சியிலிருந்து நாம் புரிந்துகொள்கிறோம். பேதுருவின் மீட்சியினை பற்றி அறியும் முன்பு அவன் பின்வாங்கியதின் காரணங்களைப் பற்றி தெரிந்துகொள்வோம்.

இயேசுவின் சீடர்களுக்குள்ளே பேதுருவுக்கு ஒரு சிறப்பான இடம் கொடுக்கப்பட்டிருந்தது. மத். 16:18இல் “நீ பேதுருவாக இருக்கிறாய், இந்த கல்லின் மீது என் சபையைக் கட்டுவேன்'' என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டான். இயேசுவுக்கு நெருங்கின வட்டத்திலிருந்த மூன்று சீடர்களில் பேதுருவும் ஒருவனாக இருந்தான். இயேசுவின் மறுரூபமாகுதலின் அற்புத காட்சியினை காணக்கிடைத்த சிலரில் பேதுருவும் ஒருவன். “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” என்று தைரியமாக அறிக்கையிட்டவன். கெத்சமனே தோட்டத்தில் இயேசுவை பிடித்துச் செல்ல போர் சேவகர்கள் வந்திருந்தபோது, மற்ற சீடர்கள் பயத்தில் ஓடிவிட, பேதுரு தைரியமாக போர்சேவகனின் காதை வெட்டினவன். பேதுரு தன்னுடைய ஊழியத்தை மிகவும் சிறப்பான முறையில் ஆரம்பித்திருந்தாலும், தன்னுடைய பின்வாங்குதலினால் பிறர் பின்வாங்கிச்செல்ல ஒரு காரணமாக இருந்தான்.

பேதுருவின் பின்மாற்றம் என்பது ஓரிரவில்

நடைபெற்ற ஒன்றல்ல. ஆனால் இந்த வீழ்ச்சி என்பது அவனுடைய வாழ்க்கையில் எங்கோ துவங்கி, மெதுவாக பலம் பெற்று கிறிஸ்துவை மறுதலிக்கும் வரை சென்றிருக்கிறது. ஒரு ஆவிக்குரிய பாடத்தை நாம் இதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. தேவனோடு உள்ள நம்முடைய உறவு உறுதி யாக இருக்கலாம்.தேவன் நம்மை வல்லமை யாக பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். இருந்தபோதிலும் மற்றவர்கள் அறியா வண்ணம் நம் ஆவிக்குரிய வாழ்க்கை பயணத்தில் ஆரோக்கியத்தை பாதிக்கின்ற வண்ணம் சில காரியங்கள் நடக்கின்றன. பிரமாண்டமான மரம் ஒன்று திடீரென ஒருநாள் விழுவதுபோன்ற நிகழ்வு இது. விழுந்துபோன மரத்தை கூர்ந்து பார்த்தோ மானால், அது நீண்ட நாட்களாக எறும்பு மற்றும் கரையான் ஆகியவற்றால் அரித்து கொண்டிருந்ததைக் காணலாம். பெரிய மரக்கிளைகளோடு, உயரமாக காணப்பட்ட இந்த மரம் திடீரென விழுந்ததைப்போன்று பேதுருவின் வாழ்க்கையும் காணப்படுகிறது.

### பேதுரு கிறிஸ்துவை மறுதலித்ததின் காரணங்கள்:

#### 1. மனித பலத்தின் மீது நம்பிக்கை:

மாற்கு 14:27,29&31இல் அனைவரும் இடறலடைந்து பின்வாங்கிச்செல்வார்கள் என்று இயேசு எச்சரிக்கும்போது, அனைவரும் இடறலடைந்து பின்வாங்கிச் சென்றாலும் தான் பின்வாங்கப்போவ தில்லை என்று பேதுரு பதிலுரைக்கிறார். தேவைப்பட்டால், பின்வாங்கிச் செல்வதைவிட மரணத்தை தழுவுவேன் என்றும் கூறுகிறார். இந்த வார்த்தைகள் ஒரு அர்ப்பணமுள்ள, விசுவாசமுள்ள சீடனிடமிருந்து வெளிப் பட்டது. எல்லோரும் விட்டு பின்வாங்கிச் செல்வார்கள் என்று கிறிஸ்து சொன்னபோது, அப்படி நடக்கக்கூடாமல் கிறிஸ்து தன்னை பலப்படுத்த வேண்டும் என்று பேதுரு வேண்டியிருக்கக்கூடும்.

கிறிஸ்துவ வாழ்க்கை என்பது ஒரு போராட்டக் களம். எபே. 6:11இல் கூறப்பட்டுள்ளபடி ஆவிக்குரிய ஆயுதங்களை தரித்தவர்களாக, கிறிஸ்து நம்மை தாங்கி நடத்த அவரை சார்ந்து நிற்க வேண்டும். பாறையாகிய கிறிஸ்துவின் மீது நாம் வேர் கொள்ளாவிடில், கிறிஸ்துவில் நிலைநிற்பது என்பது கடின மான காரியமாகிவிடும்.

டைட்டானிக் கப்பலை நிர்மானித்த அயர்லாந்தினை சேர்ந்த ஹார்லேண்ட் உல்ப் மற்றும் பிரிட்டானியாவைச் சேர்ந்த வொயிட் ஸ்டார் கம்பெனிகள் டைட்டானிக்கை மூழ்கடிக்க முடியாத வண்ணம் அதனை பிரமாண்டமாக கட்டி எழுப்பியிருக்க, அந்த கப்பல் தன்னுடைய முதல் பிரயாணத்திலே கனடாவின் தென்மேற்கிலுள்ள ஒரு 600 கிலோ பணிப்பாறையில் மோதி மூழ்கியது.

“நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள், ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது” என்று மத். 26:41இல் சொல்லப்பட்டதுபோல் மாமிசம் பெலவீன மானதால் எந்த விஷயத்திற்கும் மாமிசத்தின் மீது மட்டும் நம்பிக்கைக் கொள்வது நமது வீழ்ச்சிக்கு ஏதுவாகும்.

**“நடப்பவை சிரமமாக மாறும்போது சிரமமே நடக்க தொடங்குகிறது”** என்ற பல ஊக்க மளிக்கும் சொற்பொழிவுகளிலும், சுய முன்னேற்ற நூல்களிலும் கூறப்பட்டுள்ள இந்த வாக்கியத்தை அமெரிக்காவின் முன்னாள் அதிபர் கென்னடி, அவரது தந்தை ஜோசப் கென்னடி, பிரபல அமெரிக்க கால்பந்து பயிற்சியாளர் நைட் ராக்கேன் ஆகியோர் தங்களுடைய வாழ்விலே கடைபிடித்தனர். ஆனால் கிறிஸ்துவின் பிள்ளைகள் வாழ்விலே நடப்பவை சிரமமாக காணப்படும்போது, மத். 11:28இல் வருத்தப்பட்டு பாரம்சுமப்பவர்களுக்கு இளைப்பாறுதல் தர அழைக்கும் இயேசு கிறிஸ்துவினிடத்தில் செல்கின்றோம். இந்த வசனங்களை படிக்கும்போது நம்பிக்கையின் மகிழ்ச்சி இந்த புது வருடத்திற்கு மட்டுமல்ல எதிர்காலத்திற்கும் நம் இருதயத்திலே துளிர்கின்றது.

பரிசேயர்கள் தங்களுடைய நற்செயல் களிலும், மதரீதியான சடங்காச்சாரத்திலும்

நம்பிக்கை வைக்கும்போது, ஆயக்காரன் மேற்கூறிய காரியங்களில் நம்பிக்கை வைக்காமல் தேவனின் முடிவில்லா இரக்கத்தின் மீது நம்பிக்கை வைக்கிறான். அவன் தன்னை நீதிமானாக்கிய தேவனின் மீது நம்பிக்கை வைக்கிறான்.

யோ. 15:5 கூறுகிறது, "நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது'' பிலி. 4:13 கூறுகிறது ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்கு பெலனுண்டு".

## 2. தேவனின் மனதிலிருந்த கரிசனை அவனிடம் இருந்ததில்லை:

மத். 16, லூக். 18 மேலும் யோ. 9 ஆகிய நற்செய்தி நூல்களில் இயேசு தன்னுடைய சீடர்களை நோக்கி, அவர் யாரென்று ஜனங்கள் கூறுகிறார்கள் என்றும், சீடர்கள் அவரைப் பற்றி என்ன கூறுகிறார்கள் என்றும் கேட்கிறார். மதி. 16:16இல் "நீர் ஜீவனுள்ள தேவனின் குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு மறு உத்தரவு சொல்லுகிறார்.

இயேசு கிறிஸ்து, மூப்பர்கள் கையில் விசாரனைக்குட்பட்டு சித்திரவதைக்குப்பின் கொல்லப்பட வேண்டும் என்று கூறினபோது, பேதுரு அவரை தனியாக அழைத்துச் சென்று அவ்வாறு நடக்கக்கூடாது என்று கடிந்துகொள்ள தொடங்கினான். கிறிஸ்து அவனை நோக்கி, ''அப்பாலே போ சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய், தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" என்று பேதுருவை கடிந்துகொள்கிறார்.

நாம் தேவனுக்கேற்றவைகளையே எப்போதும் சிந்தித்து கொண்டிருக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அழிகின்ற ஆத்துமாக்களைப் பற்றிய தேவனின் சிந்தை மற்றும் அவர்களைக் குறித்த்தான கரிசனை, தேசத்தின் மூலைமுடுக்கெல்லாம் நற்செய்தியினை அறிவிக்கவேண்டும் என்ற பாரம் நம்மிலே நிலவ வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். மனுஷனுக்கு ஏற்றவைகளை மாத்திரம் சிந்திக்கின்றோமா? அல்லது உலகப்பிரகாரமான சிந்தனைகளில் உழன்று கொண்டிருக்கிறோமா? என்பதே இப்போதைய கேள்வி. இந்த வருடம் தேவனுடைய சிந்தையே நம்மிலே இருக்க வேண்டும் என்பதே நமது ஜெபமாக இருக்கிறது. தேவனோடே இருந்து அவருடைய எல்லா போதனைகளையும் கேட்டிருந்தாலும், கர்த்தருடைய சிந்தையில் இருந்த காரியங்களை பேதுரு புரிந்துகொள்ளவில்லை.

மறுரூப மலையில் கிறிஸ்துவின் மறுரூபமாகுதலை நேரடியாக பார்த்த பேதுரு அங்கேயே கூடாரம் அமைத்து தங்கிவிடலாம் என்று தனது யோசனையை எடுத்துரைப்பதின் மூலம் வெளி உலகின் சிரமங்களை எதிர்கொள்வதைவிட, மறுரூபமாகுதலின் மகிமையில் வாழ விரும்பினார். தேவனின் பிள்ளைகள் அநேகர் பேதுருவை போல எண்ணம் உள்ளவர்களாக கிறிஸ்துவின் மகிமையில் மாத்திரம் வாழ விரும்புகின்றனர். ஜனங்கள் தேவனைத் துதிக்க விரும்புகின்றனர். ஆனால் தேவனுடைய வலியினை புரிந்துகொள்ள தயாராகவில்லை. ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக எப்போதும் இருக்க ஜனங்கள் விரும்புகின்றனரே தவிர, இருண்ட உலகத்திற்கு தாங்கள் ஆசீர்வாதமாக இருக்க விரும்புவதில்லை. நம்முடைய சிந்தை மனிதனைப் பற்றியே இருப்பதினால், நம்முடைய வாழ்வினை நாமே முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கிறோமே தவிர, தேவனை ஆளுகை செய்ய அனுமதிப்பதில்லை. நம்முடைய வாழ்வினை ஆள தேவனை அனுமதிக்கும் போது தேவன் நம் சிந்தனைகளில் நிறைந்து, தனது சித்தத்தை நம்மிலே நிறைவேற்றுகிறார்.

ஏரேமியா 2:31இன் பிற்பகுதி இவ்வாறாக கூறுகிறது, "ஏன் என் ஜனங்கள் நாங்களே எஜமான்கள், இனி உம்மிடத்தில் நாங்கள்

வருவதில்லையென்று சொல்லுகிறார்கள்" இன்றைய தலைமுறையும் நாம் சுயா தீனமாக வாழ, சுயமாக முடிவெடுக்க இயலும் என்றும் நினைக்கிறது. மத். 26:42இல் பிதாவின் சித்தம் நிறைவேறுவதாக என்று இயேசு ஜெபிக்கிறார். இதனை அறிக்கையிடுவதின் மூலம் பிதாவின் சித்தத்திற்கு அவருடைய சித்தத்தினை ஒப்படைக்கிறார். நேரிடவிருக்கும் உபத்திர வத்தை தெரிந்துகொண்ட பிறகே அவருடைய சித்தத்தினை ஒப்படைக்கிறார்.

மால்தோ ஜனங்கள் மத்தியில் ஒரு மிஷனெரியாக நான் பணியாற்றிய பொழுது ஒரு பயிற்சி முகாமில் சபை மூப்பர் ஒருவர் காலை மற்றும் மதிய உணவினை தவித்து நாற்பது நாட்கள் உபவாசம் இருந்துவந்தார். இரவிலே சிறிதளவு சாப்பிடுவார். உபவாசத் திற்கான காரணம் தன்னுடைய ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதாக இருந்தது. அது எனக்கு மிகுந்த சவாலாக இருந்தது. கிறிஸ்துவைப்பற்றி அறியாமல், இரட்சிப்பின் செய்தியினை கேள்விப்படாமல் மரித்துப்போகும் ஜனங்களை குறித்ததான பாரம் நமக்கு இருக்கிறதா? நம் மனம் மனிதனின் ஆசாபாசங்களினால் நிரம்பியிருக்கிறதா? அல்லது தேவனுடைய சிந்தனைகளினால் நிரம்பியிருக்கிறதா?

### 3. பேதுரு கிறிஸ்துவை அரைமனதாக பின்தொடர்ந்தான்:

மாற்கு 14:37இல் "பின்பு அவர் வந்து, அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி சீமோனே நித்திரை பண்ணுகிறாயா? ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக் கூடாதா?" என்றார். அனைத்து சீடர்களும் ஆழ்ந்த நித்தி ரையில் அமிழ்ந்துவிட்ட நிலையில், இயேசு பேதுருவை மட்டும் நோக்கி இந்த கேள்வியை கேட்பதாக இருக்கிறது.

யோ. 18:18 & 25இல் இயேசு விசாரணைக்கு உட்பட்டிருந்த வேளையில் அரண்மனை சேவகர்களுடன் வாசலில் நின்று பேதுரு குளிர் காய்ந்துகொண்டிருந்தான். இதே பேதுருதான் உம்மோடு மரிக்கவும் ஆயத்தம் என்று கூறினவன். மற்ற சீடர்கள் கெத்சமனே தோட்டத்தில் இயேசுவை விட்டுவிட்டு ஓடிப்போனபோது, பேதுரு மட்டுமே அவரைப் பின்தொடர்ந்து வந்ததால் மற்ற சீடர்களைக் காட்டிலும் மேலானவனாக காணப்படுகிறான் அல்லவா! ஆனால் இப்போது குளிர் காய்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டிருந்த பேதுரு கிறிஸ்துவை மறுதலிக்கும் அளவிற்குச் சென்றான். இயேசு மரணத்திற்கேதுவான விசாரணையை எதிர்கொண்டிருக்கும்போது பேதுரு குளிர்காய்ந்துக்கொண்டிருந்தான். இவ்வாறு ஒரு உணர்வில்லாதத்தன்மை, மனநிறைவு மற்றும் சுயத்திற்கு முன்னுரிமை கொடுத்தல் பேதுருவிடம் காணப்பட்டது. கிறிஸ்து இல்லாத உலகில் பெருவாரியான மக்கள் அழிந்து கொண்டிருக்கும் போது பேதுருவை போல அசதியான, ஆடம்பரமான வாழ்வினை நாடிச்செல்கிறோமா?

சுயம், உலகப்பற்று, பண ஆசை மற்றும் வசதிகள் மீதான வாஞ்சை இவை அனைத்தும் இயேசுவை அரைமனதாக பின்பற்றுவதின் காரணமாக அமைகின்றன. சுயத்திற்கு மரித்து, கிறிஸ்துவுக்காக வாழ்வதை அரைமனதோடு பின்பற்றுவதின் எதிர்வினையாக இருக்கிறது. கலா. 2:20இல் பரி.பவுல் கூறுகிறார் "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்." என்னை நேசித்து, எனக்காக தன்னையே தந்த தேவனுடைய குமாரனின் மீதுள்ள விசுவாசத்தினால் நான் வாழ்கிறேன். நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார் என்ற புரிதல் முழு இருதயத்துடன் கூடிய பின்தொடர்தலுக்கு நேராக வழிநடத்துகிறது. என்மீது கிறிஸ்து வைத்த அன்பு மற்றும் எனக்காக அவர் செய்த உயிர் தியாகம் ஆகியவற்றின் அறிவு இந்த உலகத்தினை வெறுத்து, எல்லா இடங்களிலும் அவரை பின்தொடர உந்துகிறது.

இந்த உலகம் பாவத்தினால் அழிந்து கிறிஸ்து இல்லாமல் சாபமாகிப்போகும்போது, எப்படி

நான் பேதுருவைப்போல குளிர்காய்ந்து கொண்டிருக்கமுடியும்? லூக். 9:57-62இல் கிறிஸ்துவை பின்தொடர விரும்பின மூன்று நபர்களை பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவை பின்தொடர விரும்பினாலும் அவர்களுக்கு நியாய மாக்கப்பட்ட சில காரணங்களால் அவர்களால் கிறிஸ்துவை பின்தொடர முடியவில்லை. மூவரில் ஒருவன் கிறிஸ்துவை பின்தொடர ஒப்புக்கொண்டான். இன்னொருவன் இறந்துபோன தன்னுடைய தகப்பனை அடக்கம் பண்ணிவிட்டுவர உத்தரவுக் கேட்டான். மூன்றாவது நபர் வீட்டிலே மற்றவர்களிடம் உத்தரவு வாங்கி வரவேண்டும் என்று சொன்னான். மூவரும் இயேசுவை பின்தொடர மாட்டோம் என்று சொல்லவில்லை. ஆனால் கிறிஸ்துவை பின்தொடர்வதைக் காட்டிலும் சில காரியங்களுக்கு அவர்களால் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. கலப்பையில் கை வைத்துவிட்டு பின்னிட்டுப் பார்க்கிறவன் தேவனுடைய இராஜ்யத்திற்கு தகுதியுள்ளவன் அல்ல என்று இயேசு கூறுகிறார். இயேசுவை பின்தொடர வேண்டுமென்றால், எல்லாவற்றையும் விட்டுவிட தயாராகி, முழுமனதோடு அவரைப் பின்தொடர வேண்டும்.

### 4. பேதுரு மீண்டும் ஐக்கியமாகுதல் (கட்டப்படுதல்):

கிறிஸ்துவை மறுதலித்ததின் காரணமாகவும், அவர் யாரென்று தெரியாது என்று பிறரிடம் சொன்னதின் நிமித்தமும் பேதுரு மனங்கசந்து அழுதான். பிற்பாடு இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை சாட்சி பகிர்ந்தான். ஆனால் மீண்டுமாக நான் மீன் பிடிக்க செல்கிறேன் என்று தன்னுடைய அழைப்பினையும் மனிதர்களை பிடிக்குமாறு கொடுக்கப்பட்ட பொறுப்பினையும் மறந்து பின்வாங்கி செல்கிறான். அநேக நேரங்களில் இயேசுவை பின்பற்றி செல்ல, அவரின் சித்தத்தைச் செய்ய வாஞ்சிக்கிறோம். ஆனால் நாம் நம் பெலத்தின்மீது மட்டும் சார்ந்து இருப்பதால், மறுபடியும் நாம் தோற்றுக்கொண்டே இருக்கிறோம்.

மீண்டுமாக பேதுருவை இயேசு சந்தித்து முக்கியமான கேள்வி ஒன்றை கேட்கிறார். **யோனாவின் மகனாகிய சீமோனே, இவைகளைவிட என்னை அதிகமாக நேசிக்கிறாயா?** என்று. இரண்டாவது முறையாக இயேசு, சீமோனே நீ என்னை நேசிக்கிறாயா என்று கேட்கிறார். பேதுரு தன்னுடைய ஆனித்தரமான பதிலைக் கொடுத்தபிறகும் அதனை உறுதிபடுத்தும் வண்ணம் மூன்றாவது முறை பேதுருவிடம் அதே கேள்வியைக் கேட்கின்றார். சீமோனே நீ என்னை நேசிக்கிறாயா? பேதுரு மனதளவில் அதிகம் காயப்பட்டு, ஆண்டவரே எல்லாம் உமக்கு தெரியும். நான் உம்மீது எவ்வளவு அன்பாய் இருக்கிறேன் என்பதும் உமக்கு தெரியும் என்று பதிலுரைக்கிறார். இயேசு அவனை நோக்கி என்னைப் பின்பற்றி வா என்றார் (யோ. 21:19,22).

பேதுரு மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் இயேசுவை நேசிக்கவேண்டும் என்ற அடித்தளத்தின் மீது கட்டப்பட மூன்று கேள்விகள் இயேசுவின் எதிர்ப்பார்ப்பாக இருந்தன. அனைத்தையும் விட இயேசுவின் மீது நாம் அன்பு செலுத்தவேண்டும் என்று அவர் எதிர்ப்பார்க்கிறார். இந்த வருட துவக்கத்திலே நின்று கொண்டிருக்கிற நம்மிடமும் இதைத்தான் தேவன் கேட்க விரும்புகிறார். இயேசுவை தவிர மற்ற அனைத்தையும் விட்டுவிட்டு நாம் அவரிடம் அன்பு செலுத்த விரும்புகிறார். அவர் நம்மீது இவ்வளவாய் அன்பு கூர்ந்தார். தன்னுடைய இன்னுயிரையும் சிலுவையிலே நமக்காக அளித்தார். வெளி. 2:4 கூறுகிறது, ஆகிலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறைவுண்டு. தேவன் நாம் ஆதியில் கொண்டிருந்த அன்பில் நிலைத்திருக்க விரும்புகிறார். இவைகள் எல்லாவற்றையும் காட்டிலும் கிறிஸ்துவை நேசிக்கிறோமா?

**அருள்திரு. S. ஜாண் பெர்லின்,**
பொது செயலர்.

# நிலத்தில் விழுந்த கோதுமை மணி



**திருமதி. வெள்ளையம்மாள் பாக்கியமுத்து**

(1939 - 2024)

திருமதி. வெள்ளையம்மாள் அவர்கள் தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தாலுக்காவைச் சேர்ந்த குருவன்கோட்டை என்ற கிராமத்தில் திரு. பொன்னையா & திருமதி. தங்கம்மாள் ஆகியோருக்கு கடைசி மகளாக 05.07.1939 அன்று கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார்.

03.09.1962இல் திரு. வி.பி. பாக்கியமுத்து அவர்களுடன் இல்லற வாழ்வில் இணைக்கப்பட்டார். கணவரால் இரட்சிப்பின் வழியில் நடத்தப்பட்டார். விவசாயம் மற்றும் கிராம ஊழியங்களில் ஈடுபட்டு வந்த அவரது கணவருக்கு "தேவனை ஒருமுறையேனும் அறியாத மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க செல்லும்படியான" தேவனுடைய அழைப்பு மிக உறுதியாய் இருந்தபடியால் அவர்களது மூத்த மகள் எஸ்தர் மேரிக்கு திருமணம் செய்து வைத்துவிட்டு, இளைய மகள் ஜெய செல்வியை (6ஆம் வகுப்பு) விடுதியில் சேர்த்து விட்டு மகன் ஜெபராஜ் சாமுவேலை (5ஆம் வகுப்பு) உறவினரின் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டு, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்து பெரியமலையில் ஊழியம் செய்து வந்தார். அதன்பின் ஆறு மாதம் கழித்து நவம்பர் 1980இல் திருமதி. வெள்ளையம்மாள் முழுநேர மிஷனெரியாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்தார். குடும்பமாக இரண்டரை வயது மகன் ஆசீர் தனசிங்குடன் பஞ்சப்பள்ளி பணித்தளத்தில் ஊழியத்தை ஆரம்பித்தனர். பின்பு பெல்ரம்பட்டி, பாலக்கோடு, வேப்பனப்பள்ளி, பென்னகரம், மணலூர்பேட்டை, திருக்கோவிலூர், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டிணம் ஆகிய பணித்தளங்களில் தன் கணவருடன் தேவனுடைய பணியை செய்து வந்தார்.

இரக்ககுணம் நிறைந்த இவர் விசுவாசிகளுக்கு தாயாக விளங்கினார். யாவருடனும் இனிமையாய் பழகக் கூடியவர், விருந்தோம்பலில் சிறந்தவர், ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் இல்லாமையை சந்தித்தாலும், முறுமுறுப்பின்றி தேவனைச் சார்ந்து ஊழியத்தில் உற்சாகமாக ஈடுபட்டார். கிராம ஊழியங்களில் கிராமத் தலைவர்களின் எதிர்ப்பு மற்றும் மத தீவிரவாதிகளின் பயமுறுத்தல் இருந்த நாட்களிலும் பயப்படாமல், சோர்ந்து போகாமல் ஊழியம் செய்தார்.

கிராம சபைகளில் புதன் உபவாச ஜெபம் மற்றும் ஞாயிறு ஆராதனையை நடத்தி வந்தார். விடுமுறை நாட்களில் பிள்ளைகளுடன் ஊழியக் காரியங்களைப் பகிர்ந்துகொண்டு அவர்களை ஜெபத்திலும், ஆவிக்குரிய வாழ்விலும் வழிநடத்தியதின் பேரில் மகள் ஜெயசெல்வியும், மகன் ஜெபராஜ் சாமுவேலும் நம் இயக்கத்தில் முழுநேர ஊழியராய் இணைந்து பணி செய்து வருகின்றார்கள். மூத்த மகள் எஸ்தர் மேரி குடும்பம் (ஊறுகாய்) தொழில் செய்கிறார்கள். இளைய மகன் அரசு சாரா தொண்டு நிறுவனத்தில் பணி செய்கிறார்.

நம் இயக்கத்தின் மூலம் 24 வருடம் ஊழியம் செய்த திருமதி. வெள்ளையம்மாள் 04.03.2004 அன்று ஓய்வு பெற்றார். 2024, ஆகஸ்டு மாதத்திற்கு பின் அவ்வப்போது உடல் பெலவீனம் ஏற்பட்டு, திருச்சியில் மகள் ஜெய செல்வியுடன் தங்கி மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார். அக்டோபர் மாதம் முதல் மகன் ஜெபராஜ் சாமுவேல் உடன் சென்னையில் இருந்து வந்தார். சுகவீனத்தின் நிமித்தம் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு டிசம்பர் 1ஆம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சை பலனின்றி டிசம்பர் 3ஆம் தேதி அதிகாலையில் தேவனின் ராஜ்யத்தில் பிரவேசித்தார். அன்று காலை 11.00 மணியளவில் சென்னை தலைமை செயலகத்தில் நடந்த இரங்கல் ஜெபக்கூட்டத்தில் மிஷனெரிகள், ஓய்வு பெற்ற மிஷனெரிகள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கலந்து கொண்டனர். அதன்பின் அவரது உடல் சொந்த ஊரான ஆலங்குளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அவரது இல்ல வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அம்மாவின் சிறந்த வாழ்வுக்காக தேவனைத் துதிப்போம். அவரது கணவர், பிள்ளைகள் குடும்பம் மற்றும் பேரப் பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**திருமதி. ஜெய சௌந்தரி** – தகவல் தொடர்பு துறை



# பணித்தள விஜயம்

தஞ்சை பிராந்தியத்திலிருந்து (தஞ்சை, புதுக்கோட்டை, திருத்துறைப் பூண்டி) 21 பேர் அடங்கிய குழுவாக அக்டோபர் 1 – 10 தேதி வரை குஜராத் மாநிலத்திற்கு பணித்தள விஜயம் சென்றோம். நேத்ரங், போக்டி விடுதி மற்றும் ஜாவ்டா பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு, அவர்களோடு உரையாடி அவர்களுக்காக ஜெபித்தோம். போக்டி விடுதி ஆலயத்தில் பணித்தள ஊழியர்களுடன் சேர்ந்து உபவாசித்து ஜெபித்தோம். சில்வாசா பணித்தள திருமுழுக்கு ஆராதனையில் பங்குகொண்டோம். தானாரந்தா, கீழிபாணி, போப்பி, பாட்டிரதா, மதுரா ஆகிய இடங்களில் பகல் மற்றும் இரவு கூடுகைகளில் கலந்துகொண்டோம். எங்களுடன் முன்னோடி மிஷனெரியான மறைதிரு. ஜான்சன் பர்னபாஸ் அவர்கள் வந்தது மிகவும் சிறப்பான நிகழ்வு. ஊழியம் செய்யும் மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் அர்ப்பணிப்பு, உழைப்பு, மற்றும் உபசரிப்பு எங்களை வியப்பில் ஆழ்த்தியது. அக்டோபர் 10ஆம் தேதி காலை அனைவரும் சுகத்துடன் ஊர் வந்து சேர தேவன் கிருபை செய்தார். பணித்தள விஜயத்தில் கலந்து கொண்டவர்கள் இன்னும் அதிகமாக ஜெபிக்கவும், கொடுக்கவும், மற்றவர்களை உற்சாகப்படுத்தவும் தீர்மானம் எடுத்துள்ளார்கள். தேவனுக்கே மகிமை!

**மறைதிரு. P. பால்ராஜ் ஆபிரகாம்,** பிராந்திய விரிவுப்பணி செயலர் – தஞ்சாவூர்.



# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்

சென்னை, பாடி பிராந்தியத்தின் மூத்த ஜெபக்குழுத் தலைவர் திரு. டி.கே. வின்சென்ட் ஐயா (வின்சென்ட் கேப்ஸ்) அவர்கள் 15.10.2024 அன்று தன் 97ஆம் வயதில் தேவனுடைய இராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களையும், ஊழியர்களையும் அதிகம் நேசித்து, ஜெபித்து, தங்களுடைய ஈகையினால் தாங்கி வந்தவர்கள். தன் ஆசிரியப்பணியின் காரணமாக சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டத்தில் 35 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி ஓய்வு பெற்றப்பின் 1986 முதல் தன் பிள்ளைகளுடன் பாடியில் வாழ்ந்து வந்தார்கள். அந்நாட்களில் திருவள்ளூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் (பாடி, அம்பத்தூர், பொன்னேரி, கும்மிடிபூண்டி) இயேசுவை அறியாத வட இந்திய மக்களுக்காக ஜெபிக்கவும், கொடுக்கவும், கற்றுக்கொடுத்தவர்கள். பாடியில் அவர்களது கால் படாத இல்லங்களே இல்லை என்று எல்லோரும் அன்புடன் சொல்லும் வண்ணம் கிறிஸ்தவ இல்லங்களை சந்தித்து, நலன் விசாரித்து ஜெபிப்பது மட்டுமல்லாது மிஷனெரிகளையும் அழைத்துச் சென்று ஜெபிக்க வைத்தவர்கள். அவர்களுடைய நான்கு பிள்ளைகளுக்கும் ஊழிய பாரத்தைக் கொடுத்து ஊழியத்தை தாங்க உற்சாகப்படுத்தியவர்கள். இவருடைய பிரிவால் வாடும் குடும்பத்தினர்களுக்காக ஜெபிப்போம்.

பாடி விரிவுப்பணி பிராந்தியம்



# பணித்தள விஜயம்

சென்னை அண்ணா நகர் ஜெபக்குழு சார்பாக கடந்த அக்டோபர் மாதம் 16ஆம் தேதி குஜராத் மாநிலத்தின் பணித்தளங்களைப் பார்வையிட 13 பேர் கொண்ட குழுவாக சென்றோம். பல பணித்தளங்களைப் பார்வையிட்டதோடு பிப்பள்வாடா, ராந்தா, கெர்காம், சில்வாசா போன்ற விடுதிகளில் படிக்கும் நம் விசுவாசிகளின் பிள்ளைகளைச் சந்தித்து அவர்களை உற்சாகப்படுத்தினோம். அண்ணா நகர் ஜெபக்குழு சார்பாக அம்பாபாரி கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயத்தை 20.10.2024 அன்று பிரதிஷ்டை செய்து, ஆலய ஆராதனையில் கலந்து கொண்டோம். அங்குள்ள விசுவாசிகளின் பயபக்தி, ஆராதனை, பாடல்கள், அவர்களுடைய ஒழுங்கு முறைகளைக் கண்டு வியந்தோம். மிஷனெரிகள் எங்களை அன்போடு வரவேற்று, உபசரித்து வழிநடத்தினார்கள். 22.10.2024ஆம் தேதி எல்லோரும் நல்ல சுகத்துடன் சென்னை திரும்பினோம். இந்த பணித்தள விஜயம் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. A.P. கனகராஜ்,** விரிவுப்பணி செயலர் – அண்ணாநகர்.

# பணித்தள விஜயம்



தேவ கிருபையால் அக்டோபர் மாதம் 11-ம் தேதி துவங்கி 20-ம் தேதி வரை 18 பேர் கொண்ட குழு ஜார்கண்ட் பகுதியிலுள்ள பணித்தளங்களைப் பார்வையிடச் சென்றோம். அங்குள்ள மால்டோ, சந்தால், ஒராவன் மக்களோடு உறவாட தேவன் கிருபை செய்தார். அவர்கள் எங்கள் கால்களை கழுவி அன்போடு எங்களை ஏற்றுக்கொண்டனர். மாதேஸ்புரா பணித்தளத்தில் சந்தால் இன மக்கள் ஆராதிக்கும் சபையின் மேற்கூரை தகடுகள் எல்லாம் பழுதாகியிருந்தது. அதை புதுப்பித்து கொடுக்கலாம் என்று தீர்மானித்து ஜெபத்துடன் திரும்பி வர தேவன் உதவி செய்தார்.

**திரு. பிச்சைமணி சி.,** கௌரவ விரிவுப்பணி பிராந்திய செயலர் – வட சென்னை

# ஊழியர்களின் குருத்துவ அபிஷேகம்



ஜார்கண்ட் மாநிலம், தும்காவில் கடந்த டிசம்பர் மாதம் 8-10ஆம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற்ற குருத்துவ பயிற்சியில் நமது இயக்கத்தில் பணிபுரியும் 25 முழுநேர ஊழியர்களும், 19 சுதேச ஊழியர்களும் பங்குபெற்றனர். அதன்பின் டிசம்பர் 11ஆம் தேதி வடக்கு இவாஞ்சலிகல் லுத்தரன் திருச்சபையின் (NELC) பிரதம பேராயர் Rt. Rev. ஐசிலாஷ் பஸுமடரி அவர்களால் இந்த 44 ஊழியர்களும் குருத்துவ அபிஷேகம் பெற்றனர். இந்த குருத்துவ அபிஷேக ஆராதனையில் நமது இயக்கத்தின் பொதுச்செயலாளர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியை மிக அருமையாக நடத்தித்தந்த NELC சபை பிரதம பேராயர் அவர்களுக்கும், நமது இயக்கத்தின் மூலம் நடைபெறும் வடஇந்திய ஊழியங்களுக்கு திடமான ஆதரவையும், பங்களிப்பையும் தந்து வரும் NELC திருச்சபைக்கும் இயக்கமாக இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறோம். சுமார் 700 பேர் கலந்துகொண்ட இக்குருத்துவ அபிஷேக விழா மிக சிறப்பாக தேவ நாமம் மகிமைப்படும்படி நடந்து முடிந்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



## பணித்தள விஜயம்

திண்டுக்கலிலிருந்து 13 பேர் அடங்கிய குழு 10.10.2024 முதல் 20.10.2024 வரை ஹிமாச்சலப் பிரதேசம் சென்று மிஷனெரிகளுடனும், விசுவாசிகளுடனும் நேரங்களை செலவிட்டு வர தேவன் உதவி செய்தார். இந்த பணித்தள விஜயமானது எங்கள் அனைவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. மிஷனெரிகளின் கடினமான உழைப்புகளை நேரில் காண உதவி செய்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். கடினமான பள்ளங்களிலும், மேடுகளிலும் வாழும் விசுவாசிகளையும், மிஷனெரிகளையும் காண செய்த தேவனுக்கு கோடான கோடி நன்றிகள். நாங்கள் யாவரும் அதிக ஆத்தும பாரத்துடன் சுகமாக வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார்.

**அருள்திரு. ஆல்பர்ட் சாமுவேல்,** விரிபுப்பணி செயலர் – திண்டுக்கல்

## நிதி அலுவலகத்திலிருந்து




**இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்**

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI** - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

**SBI** - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank** - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

## காணிக்கை அனுப்புவதற்கு QR கோடு வசதி

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

## மகிமைக்குள் பிரவேசித்தார்



திருநெல்வேலி மாவட்டம், நெல்லை வடக்கு-3 முன்னேற்றப்பணி மாவட்டம், தென்கலம் பகுதியைச் சேர்ந்த திருமதி. ஜெபக்கனி தாமஸ் (80 வயது) அவர்கள் கடந்த 2004-ம் ஆண்டு முதல் 2020-ம் ஆண்டு வரை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஜெபக்குழு தலைவியாக சிறப்பாக பணியாற்றியவர்கள். ஜெபக்குழு நடத்துவதோடு மாதந்தோறும் காணிக்கை சேகரித்து ஒரு மிஷனெரி மற்றும் இரண்டு பிள்ளைகளை ஆதரித்து வந்தார்கள். இவர்கள் கடந்த 20.11.2024 புதன் கிழமை அன்று அதிகாலை 1.00 மணியளவில் தேவ ராஜ்யம் சென்றடைந்தார்கள். இவர்களுக்கு ஐந்து பெண் பிள்ளைகளும், நான்கு ஆண் பிள்ளைகளும் உண்டு. அதில் மூத்த மகன் அருள்திரு. டி.ஒய்.பி. ஆசீர் அவர்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரியாக பணி செய்து வருகிறார்கள். மூன்றாவது மகன் அருள்திரு. டேனியல் (Tuticorin-Nazareth Diocese) ஆயராக ஊழியம் செய்து வருகிறார்கள். குடும்பத்தின் பேரப் பிள்ளைகளை மிஷனெரி ஊழியத்தை ஆதரிக்க வைத்தார்கள். அவர்களுடைய பேரன் திரு. பாபு சிங் சென்னை வளசரவாக்கம் கௌரவ முன்னேற்றப்பணி செயலராக பணி செய்து வருகிறார். தனது தாயாரை இழந்து தவிக்கும் பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**திரு. கிறிஸ்டி ஹெபர் பாஸ்கர்,** கௌரவ விரிவுப் பணி செயலர், நெல்லை.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கோன்கா கிரி பாபு, திரு. கின் சாவ்ம்
திரு. மீனுகா அடப்பா மேத்யூ
திருமதி. சரிதா பால் சௌதரி ராஜேஷ்
திரு. ஹெபெல் ஹெம்ரோம்

# ஜம்மு

## நௌஷேரா:

### ஷேக் சுபானி & எமி பாக்கியா

**துதிக்க:** டாங்ரி பகுதியில் ஊழியம் செய்ய சோமி குடும்பமாக அர்ப்பணித்துள்ளார். பாம்பு கடியிலிருந்து ருக்மணியும், பேருந்து விபத்திலிருந்து விசுவாசி மனோகரும் பாதுகாக்கப்பட்டனர். விசுவாசி அனுராதாவின் தொடர் ஜெபத்தினால் அவரது கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கேனித், பெராரி கிராமங்களிலிருந்து தேவன் தந்துள்ள இரண்டு தொடர்பாளர்களும் விசுவாசத்தில் வளர; சாக்சி பேனின் திருமணம் தடையின்றி நடைபெற; கமல் மற்றும் ராகுல்ராணுவத் தேர்வில் வெற்றி பெற்று ராணுவத்தில் சேர; சியால் மற்றும் காஹி சபை விசுவாசிகளின் மத்தியில் ஒருமனபாட்டை தேவன் கட்டளையிட; கிறிஸ்துவை அறிக்கையிடுவோருக்கு தடையாக இருக்கும் சமுதாய பயங்கள் நீங்க ஜெபிப்போம்.

### சம்பா: அய்யனார் டேவிட் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** ரேகா கிராமத்திற்கு புலம்பெயர்ந்து வந்துள்ள தொழிலாளர்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. கூச் மற்றும் சக்முன்கி கிராம சபை மூப்பர்கள் ஊழியத்திற்கு நல்ல ஒத்துழைப்பு தந்து வருகின்றனர். புதிதாக வேதாகம வகுப்புகள் மற்றும் பெண்கள் ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சைதா மற்றும் பட்யாரி கிராமங்களில் கிடைத்துள்ள புதிய தொடர்பாளர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹிராநகர், பொன்கல் மற்றும் ராஜ்பூரா கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; மகேசா, ராஜ்புத் இன மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்ட; ஊழியம் வளர்ந்து வரும் கூச் பகுதியில் எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களின் இருதயத்தில் தேவன் இடைபட; பல்வீர், அனு ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

### நேர்வா: எஸ். இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவில் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். ஆறு இடங்களில் உபவாச ஜெபம் தடையின்றி நடத்தப்பட்டுள்ளது. இரண்டு புதிய கிராமங்களில் முதன்முறையாக நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை கட்டளையிட்டுள்ளார். கிராமத்தினரின் எதிர்ப்பினால் தடைப்பட்டிருந்த ஆராதனை மீண்டும் துவங்கப்பட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீவிர எதிர்ப்பினை சந்தித்து வரும் டுங்க்லாஜ் சபை விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; தைரா சபை விசுவாசிகள் கிராமத்தினரின் கட்டுப்பாடுகளுக்கு பயப்படாமல் விசுவாசத்தில் உறுதியாக நிற்க; பரனு, அட்டல் மற்றும் பங்கால் கிராம விசுவாசிகளுக்கு காணப்படும் எதிர்ப்புகள் மறையவும், பங்கால் சபையின் விசுவாசிகள் ஜெபத்திலே உறுதியாய் தரித்திருந்து, உபத்திரவத்தை மேற்கொள்ள; புதிய கிராமங்களான சோப்பால், ஜிக்னிபால், குப்வி ஆகியவை நற்செய்தியினால் சந்திக்கப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேகலை செல்வி பிரபாகர்
திரு. நாத்தான் குமார் பெபர்தா
திருமதி. மஹாலே ஏமன்பேன் பாங்சிங்
திரு. முன்னா மொஹன்தியர்
திரு. ரவுத் சுபாஷ்பாய் லானுபாய்
திரு. உப்தேஷ் குமார்

## ரிகாங்பியோ:

### சங்கர் ஏ. & ரூத் மேரி

**துதிக்க:** பாஸ் பகதூர் என்பவர் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட்டுள்ளார். புதிதாக இரண்டு கிராமங்களில் நற்செய்தி பகிர தேவன் கிருபை செய்துள்ளார். ருமானசிங் மகள் ரீத்துக்கு ஜெபத்தின் மூலம் வெளிநாட்டில் செவிலியர் வேலை கிடைத்துள்ளது. வாகன விபத்திலிருந்து பிரகாஷ் தேவனால் பாதுகாக்கப்பட்டுள்ளார். பெண்கள் கூடுகை, மூப்பர் கூடுகை ஆகியவை தடையின்றி சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் அர்ஜுன், கராமன், பூணம், அஜய், ராம்பியாரி, அனு, ரன்ஜீ ஆகியோர் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள பகத்சந்த் பூரண குணமடைய; இந்த மாதம் நடைபெறவிருக்கும் அனைத்து நிகழ்ச்சிகளும் தடையின்றி நடைபெற; நமது ஊழியத்திற்கு மிகவும் ஆதரவாக இருந்த நமது மிஷனெரியின் வீட்டு உரிமை யாளர் மரணமடைந்துள்ளார், அவரது பேரனின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

## ராம்பூர்:

### தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ் லாம்வுங்

**துதிக்க:** எட்டு கிராமங்களில் புதிதாக சுமார் 643 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தக்லேச் சபையைச் சேர்ந்த விரு என்ற நேபாள விசுவாசி இராணுவத்தில் உடல் பயிற்சியாளராக உள்ளார். விடுமுறைக்கு ஹிமாச்சலத்திற்கு வந்த அவர் விபத்திற்குள்ளானார். அவரது வாகனம் முற்றிலும் சேதமடைந்த போதிலும் அற்புதமாய் அவரது ஜீவனை தேவன் பாதுகாத்தார். சுனிதா மேகி பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கோபுதேவியின் வீட்டில் நடத்தப்பட்ட ஜெபக் கூட்டத்திற்கு பின் அவர் ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகிறார். மூன்று ஆண்டுகளுக்குப் பின் ஜெபத்தின் மூலம் பிரியா குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோபு தேவி தொடர்ந்து விசுவாசத்தில் வளரவும், அவர் கண் வலியிலிருந்து பூரண சுகம் பெறவும்; விபுல், நரேந்திரன் மற்றும் கலா தேவியின் மகன் விசுவாசத்தில் வேரூன்றி வளரவும், சிலரின் தவறான வழிக்காட்டுதலினால் ஆலயம் செல்வதை நிறுத்தியுள்ள பிரேஷ்டி தேவி மீண்டும் ஆலய ஆராதனையில் பங்குபெற; விசுவாசிகளை ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளவிடாமல் தடைசெய்யும் பிசாசின் கிரியைகள் முற்றிலும் தகர்க்கப்பட; நமது சுதேச ஊழியர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தை உண்மையும் உத்தமுமாய் நிறைவேற்ற ஜெபிப்போம்.




# பஞ்சாப்

## அஹ்மத்கட்மண்டி:

### கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா

**துதிக்க:** இரண்டு பேர் இயேசுவே மெய்யான தெய்வமென்று அறிக்கை யிட்டுள்ளனர். சிகா, ஷன்ஹர், பருன்டி மற்றும் சோகாகியான் கிராமங்களில் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஜெபத்தின் மூலம் சகோதரி சோனிக்கு எஸ்.பி.ஐ. வங்கியில் பணி நியமன ஆணை கிடைத்துள்ளது. ரோகிரா சபையில் புதிய நபர்கள் ஆராதனையில் பங்கு பெற்று வருகிறார்கள். மான்சா பகுதியில் நடைபெற்ற பிராந்திய வாலிபர் எழுப்புதல் முகாமில் அஹ்மத் கட்மண்டி பணித்தளத்திலிருந்து 24 பேர் கலந்துகொள்ள உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களுடைய மனைவிமார் களை இழக்கக் கொடுத்துள்ள லஷ்மண், மான்சிங் மற்றும் தன்னுடைய கணவனை இழந்துள்ள நீலம்பேன் ஆகியோரின் ஆறுதலுக்காக; கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டும் அதை அறிக்கையிட தயங்கும் மக்களின் பயங்கள் நீங்க; வயிற்றுப் பிரச்சனையினால் நீண்ட நாட்களாக சுகவீனப்பட்டுள்ள தர்மேந்தர்சிங் விரைவில் சுகம் பெற; மிஷனெரிக்கு சிறுநீரில் வெளியாகிற புரதம் நிறுத்தப்பட, மிஷனெரியின் வாலிப மகள் தீர்த்தனாவின் முகத்தில் காணப்படும் வெள்ளைத் தழும்புகள் மறைந்து சுகம்பெற ஜெபிப்போம்.

## மான்சா:

### தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** மூன்று பேர் இயேசுவின் மந்தையில் இணைந்துள்ளனர். ஏழு புதிய குடும்பங்கள் ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். நான்காவது வருடாந்திர மேளாவில் சுமார் 800க்கும் மேற்பட்ட விசுவாசிகள் கலந்துகொண்டனர்; அதில் சுமார் 150 பேர் முதன்முறையாக சுவிசேஷத்ததைக் கேட்கும் வாய்ப்பை பெற்றனர். விபத்தினால் ஆறு மாதங்களாக கால் செயலிழந்த நிலையில் ஜெபத்தின் மூலம் ஊன்றுகோலின் உதவியுடன் நடக்க சாந்தி சிங்கிற்கு கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திட்டமிட்டபடி நடைபெற விருக்கும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் தடையின்றி நடைபெற; நமது விசுவாச வாலிபர்களான லடிசிங், சுமித்சிங், மஞ்சித் சிங், குலாப் சிங், ஜோதி கௌர், அன்மோல் சிங், குல் தீப் சிங், ஜீவன் கமார், பல்தேவ் சிங், காக்கி கௌர், பிரீத் கௌர், பிட்டு சிங் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை அமைய; அங்கிரேஜ் சிங், சம்சேர் சிங் மற்றும் சுஜித் சிங் குடும்பங்களில் தேவன் சமாதானம் அருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஐவி மார்கரெட் நிக்கல்சன்
திருமதி. பாக்கியம் கொர்நேலியு
திரு. பும்சோன்சின், திரு. லால் கிஷோர் முர்மு

### பட்டிண்டா:

**சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா; பிரதாப் ரஹாங் & ரேஷ்மி**

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். குட்டிவாலாக்கலான் மற்றும் மடிக்கலான் கிராமங்களில் இயேசு திரைப்படம் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. குட்ஷோ மற்றும் பாய்ரூபா பகுதிகளில் வாலிபர்களுக்கான விசேஷித்த பயிற்சி நடத்தப்பட்டது. பிசாசின் பிடியிலிருந்து சரண்சித் கௌருக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்திலிருந்து அநேக வாலிபர்கள் முழுநேர ஊழியத்திற்கு தங்களை அர்ப்பணிக்க; பாய்ரூபா ஆலயத்தின் சுற்றுச்சுவர் மற்றும் புச்சோ மண்டி ஆலயத்தில் தளம் போடுதல் மற்றும் சுற்றுச்சுவர் வேலைகள் விரைவில் முடிவடைய; மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் லக்னன்சிங் மற்றும் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் மோனிசிங் ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

### நிஹால் சிங் வாலா & பகாபூரானா:

**சிவசங்கரன் & மெர்சி எலிசபெத்**

**துதிக்க:** மூன்று இடங்களில் நடந்த இரவு கூட்டங்களின் மூலம் அநேகருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெண்கள் ஜெபக்குழு மூலம் நிவியாயா கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்யப் பட்டது. தேவனுடைய கிருபையால் ஞாயிறு ஆராதனை நடத்த காவல் துறையிடமிருந்து முழு பாதுகாப்பு கிடைத்துள்ளது. 12 கிராமங்களில் நடந்த பின்தொடர் ஊழியங்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்வாங்கிபோன விசுவாசிகள் மீண்டும் இயேசுவின் அன்பினால் தொடப்பட; சுக்வேந்தர் மற்றும் மான்சியை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; சிறுமி கிரேஸியின் நாவின் கட்டுகள் அவிழ்க்கப்பட்டு விரைவில் பேசும் திறன்பெற; சிறைச்சாலையில் இருக்கும் சர்ப்ஜித் கௌருக்கு விடுதலை கிடைக்கவும், அவரது குடும்பம் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

## வல்லம் பணி மாவட்டம்

## அறைகூவல் கூட்டங்கள்

இடம்: **T.E.L.C.** ஆலய வளாகம்,
மேலமையூர்

நாள்:
25.01.2025 & 26.01.2025 மாலை
5.30 மணிக்கு (சனி & ஞாயிறு)

செய்தி:
**Rev. S. ஜாண் பெர்லின்,**
பொதுச் செயலாளர், FMPB, Chennai.

பணித்தள செய்தி:
**பஞ்சாப் மாநில மிஷனெரிகள்**

தொடர்புக்கு:
9994170782, 9840776998,
9444722238, 9688443423




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுரேஷ் மால்தோ
திருமதி. இவாஞ்சலின் சாம்ராஜ்
செல்வி. மனிஷா லக்ரா
செல்வி. லிங்நீச்சாங்

# ஹரியானா

## பர்வாலா:

### மிண்டு குட்டும் & சுப்ராபாக்

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கை செய்துள்ளனர். கைபிபூர் ஆலயத்தின் சுற்று பகுதியில் கற்களை அடுக்கி எல்லையை உறுதிப்படுத்த கிராம நிர்வாகி உதவி செய்துள்ளார். கைப்பூர் கிராமத்தைச் சேர்ந்த பூஜாவுக்கு தொண்டை புற்றுநோய் தீவிரமடைந்த நிலையில் ஆலயம் வந்து ஜெபித்தபோது தேவன் சுகமருளினார். டைபாய்டு காய்ச்சலினால் நீண்ட நாட்கள் படுக்கையிலிருந்த பர்வாலா கிராமத்தைச் சேர்ந்த சுசீலா ஜெபத்தினால் சுகம் பெற்றார். கால் வலியினால் நடக்க முடியாமலிருந்த சபிதாவுக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சனினியா கிராமத்தைச் சேர்ந்த பூணம் காச நோயிலிருந்து சுகம் பெற; கைபிபூரைச் சேர்ந்த போலிபேன் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற; இனம்புரியா நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள காக்காரா கிராமத்தின் ரவீந்தருக்கு தேவன் பூரண சுகமருள; கைபிபூர் ஆலயத்தின் ஆண்டுவிழா மற்றும் வாலிபர் முகாமில் திரளானோர் பங்கு பெற்று சிறப்பாய் நடைபெற; பெண்கள் ஜெபக்குழுக்கள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## கலான்வாலி:

### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** முதன்முறையாக 90 பேர் நற்செய்தி கேட்டுள்ளனர். 60 பேருக்கு கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஜீப்குழு மூலம் இரண்டு இடங்களில் இயேசு திரைப்படம் மற்றும் 2 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் நற்செய்தி அறிவிக்கவும், 3 புதிய தொடர்பாளர்கள் கிடைக்கவும் தேவன் உதவி செய்தார். பணித்தளத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட சிறுவர் முகாமில் 42 சிறுவர்கள் மற்றும் 8 பெரியவர்கள் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிபோன குகன்வாலி கிராமத்தைச் சேர்ந்த திருமதி. பம்மி குடும்பத்தை சந்தித்து வேத வசனத்தின் மூலம் ஆலோசனை கூறியபோது அவர்கள் மீண்டும் ஆலய ஆராதனையில் பங்கு பெறவும், அவர்களின் மூலம் சாவந்த் கேரா கிராமத்தில் இரவுக் கூட்டம் நடத்தவும் தேவன் கிருபை செய்தார். மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த ஜக்மல்வலி கிராமத்தைச் சேர்ந்த திருமதி. சுக்பால் கௌருக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜலாலானா, சகோரியன் மற்றும் ஜக்மல்வலி கிராமங்களைச் சேர்ந்த புதிய தொடர்பாளர்கள் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; சிர்சா கிராமத்தைச் சேர்ந்த புதிய தொடர்பாளரான திருமதி. இக்பால் கௌர் உடல்நலப் பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் கஷ்டப்படுகிறார். தேவன் அவருக்கு பரிபூரண சுகமருளவும், அவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும்; பணித்தள ஆலயக் கமிட்டி மற்றும் கலன்வாலி ஆலயக் கமிட்டியில் சேர்க்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்கள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும், ஆவிக்குரிய ஜீவியத்தில் தங்களை வளர்த்துக்கொள்ள பிரயாசப்படவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜென்னிஸ் J.B

## ரத்தியா:

### கார்த்திகேயன் & ஜெயந்தி

**துதிக்க:** 225 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டடுள்ளது. ஒருவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். நான்கு கிராமங்களில் பெண்கள் ஜெபக்குழுக்கள் மற்றும் ஒரு சிறுவர் ஜெபக் கூடுகை புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு ரமேஷ் குமார் குடும்பத்தை குழந்தைச் செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒவ்வொரு விசுவாச சகோதரரும் நற்செய்தி பணியில் ஆர்வத்துடன் ஈடுபட; கோமல் மற்றும் மன்னா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற; சௌமியா மஞ்சு குடும்பம் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

## தோஷம்: அஜய் பர்டே

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் 30 பேருக்கு நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். நமது ஆலயத்திலுள்ள வாலிபர்கள் சுவிசேஷ ஊழியத்தில் ஆர்வத்துடன் பங்குபெற்று வருகின்றனர். பிரவீன் வலிப்பு நோயிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாச வாலிபர்களுக்கு நல்ல எதிர்காலத்தை தேவன் அமைத்துத்தரவும், கிறிஸ்துவுக்குள் ஆழமாக வேரூன்றி கனி கொடுக்கவும்; சபைகளில் கூடி ஆராதிக்கும் விசுவாசிகளுக்கு விரைவில் ஒரு ஆலயம் கட்டப்பட; ஜெபங்களில் கிரமமாக பங்கு பெறும் நமது புதிய தொடர்பாளரான பிஜோ தேவி பக்கவாதத்திலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

## ஃபத்தேஹ்பாத்:

### டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்

**துதிக்க:** மூன்று பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள்சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். சுமார் 230 பேர் சுவிசேஷத்தை முதன்முறையாக கேட்டுள்ளனர். ஜெபத்தின் மூலம் மல்கிதோவுக்கு குடியிலிருந்து தேவன் விடுதலை அருளினார். பாட்டியா காலனி ஜெபக்குழுவின் மூலம் இரண்டு குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கின்றனர். பட்டில்டபார் ஆராதனைக்குழுவினர் தங்கள் சொந்த காணிக்கையினால் ஆலயத்தின் கீழ் தளத்தை போட்டு முடிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மச்சிரா கிராமத்தைச் சேர்ந்த சுபாஷின் தங்கை குடும்பத்தினர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; மட்டானா கிராமம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் காணப்படும் பிசாசின் வல்லமைகள் முறியடிக்கப்படவும், அநேகர் சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரமேஷ்வர் தயாள் நிர்மல்

### ஜீவன் நகர்:

**அலியாக்கீம் ஜெனா & தீபிகா**

**துதிக்க:** ரிம்பி, ஷனோ, பிரீத் கௌர் ஆகியோர் 11 நாட்கள் உபவாசமிருந்து தங்கள் சகோதரர் ஜெகாசிங் குடிப்பழக்கத்தி லிருந்து விடுதலை பெற ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையை அளித்தார். விபத்தில் சிக்கிய கட்டிட தொழிலாளியான வாழ்வே சிங்கின் கை செயலிழந்த நிலையில் நமது சுதேச ஊழியர் அவருக்காக ஜெபித்த போது, அவருக்கு அற்புத சுகமளித்து மறுபடியும் வேலைக்கு செல்லும்படி கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள விருப்பமின்றி ஆன்லைன் ஆராதனைகளில் திருப்தியடையும் சந்து நகர் விசுவாசிகள் மனந்திரும்பி ஆலய ஆராதனையில் தவறாமல் கலந்துகொள்ள; திட்டமிட்டபடி சத்சங் கூடுகை, இரவு கூடுகைகள், வேதாகம வகுப்புகள், திரைப்பட ஊழியம், சிறு ஜெபக்குழு ஆகியவை தடையின்றி நடைபெற; சிறுநீரக கல்லினால் அவதியுறும் 12 வயது யுப்ராஜ்க்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## ராஜஸ்தான்

### ஹனுமான்கட்: முதவத்து ராஜு நாயக் & புக்கியா ஜான்சிபாய்

**துதிக்க:** இரண்டு பேர் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். குஞ்சா கிராம சபையின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது, ஆயிரக்கணக்கோர் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற தேவன் உதவி செய்தார். வேலை நிமித்தம் மும்பைக்கு சென்ற ராஜ்குமாரை சிலர் ஏமாற்றி பணம் பறித்த போதிலும் சரீர சுகத்துடன் வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார். விஷப் பாம்பு கடியிலிருந்து கர்னல் பாதுகாக்கப்பட்டார். ஊக்கமான ஜெபத்தினால் விசுவாசி சோனுவுக்கு சொந்த வீடு கட்ட உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நுரையீரல் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள ரேனு கௌர் பூரண சுகம்பெற; அடிக்கடி சுகவீனமாகும் அசோக் குமாரின் குடும்ப உறுப்பினர்களுக்கு தேவன் நல்ல ஆரோக்கியத்தை அருள; எப்போதும் குடும்பத்தினருடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் லிக்வீர்சிங் மனந்திரும்ப; அதிக குடிப்பழக்கத்தினால் மனைவியை விட்டுச் சென்ற மால்கீத் சிங் இப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று குடும்பத்துடன் சமாதானமாக வாழ ஜெபிப்போம்.

## செங்குன்றம், காரனோடை, காவாங்கரை & புழல்
## குடும்பக் கூடுகை

இடம்: E.C.I. தூய பவுல் ஆலயம், செங்குன்றம்.

நாள்: 5.01.2025 ஞாயறு மாலை 5.30 மணி முதல் 8.30 வரை

செய்தி: **Rev. K. பிரபாகர சாரதி,** FMPB, Chennai.

பணித்தள செய்தி: **Rev. M. நாகராஜன்,** மஹாராஷ்டிரா

தொடர்புக்கு: 9443091378, 9840476641




*உபவாச ஜெபநாள்*

### கேர்வாடா:

**கெனோஸ் ஸ்டான்லி இன்பராஜ் & சாந்தினி, தேபாஷிஸ் ஹெம்ரோம் & ஷிஃபாலி ஹன்ஸ்தா**

**துதிக்க:** 31 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்துள்ளனர். அசுத்தாவியின் தாக்குதலினால் கண்பார்வை மற்றும் பேச்சுத் திறனை இழந்து ஒருமாத காலமாக கஷ்டப்பட்டு வந்த பரம்பூரைச் சேரந்த சீதா பேன் தொடர் ஜெபத்திற்கு பின் பூரண விடுதலைப் பெற்றார். கண்பார்வையற்ற சுனாவாடியைச் சேர்ந்த 20 வயது வாலிபன் நிரஜ், ஓடாபோடா ஆலயத்திற்கு தொடர்ந்து வந்து ஜெபித்தபோது தேவன் அவருக்கு பார்க்கும் திறனைக் கட்டளையிட்டார். பக்கவாதத்திலிருந்து காந்தி தமோர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லக்ஷ்மி நுரையீரல் புற்றுநோயிலிருந்தும், காலு, மேகி ஆகியோர் இருதய நோயிலிருந்தும், கல்பேஷ், அஸ்வின் ஆகியோர் சிறுநீரக பிரச்சனையிலிருந்தும் பூரண சுகம்பெற; 12 ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் வேண்டி ஜெபித்து வரும் மலாபேனுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; தொண்டையிலுள்ள கட்டியினால் சாப்பிட முடியாமல் கஷ்டப்படும் சங்கர் குணமடைய; திட்டமிட்டபடி நடைபெறவுள்ள பயிற்சி முகாம்கள், பெண்கள் கூடுகைகள், சிறுவர் ஊழியங்கள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## டெல்லி

### பட்பர்கன்ஜ்:

**ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்**

**துதிக்க:** முதன்முறையாக 25 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏழு வேதாகம வகுப்புகள் வாலிபர்களுக்காக நடத்தப்பட்டது. திரிலோக்பூர் பகுதியிலிருந்து இரண்டு தொடர்பாளர்களை தேவன் தந்துள்ளார். வாலிபர் மற்றும் இளம் வாலிபர்களுக்காக நடத்தப்பட்ட முகாமில் அநேகர் பங்கு பெற்று வேத வசனங்களை கற்றுக்கொண்டனர். மூன்று நாட்கள் நற்செய்தி கூட்டங்கள் தடையின்றி நடத்தப்பட்டது. இப்பணித்தளத்தில் 8-வது ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டைப் பண்ணப்பட்டதற்காகவும், ஆலயம் வர தடைபட்டிருந்த நீலம் குடும்பத்தார் மீண்டும் ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருவதற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் ஒவ்வொருவரும் பிறருக்கு நற்செய்தி அறிவிக்க முன்வர; சோனாலி மற்றும் சுனிதா தவறாமல் ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; பிசாசின் பிடியிலிருந்து ஜோதி விடுதலை பெறவும், சுகத்திற்காக மந்திரவாதிகளிடம் செல்லும் மக்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க; புதிய தொடர்பாளர்களான சந்திவதி, பிந்து, தாரா, ஊர்மிளா, ரவிபாபு குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.




# உத்தரகண்ட்

## தினேஷ்பூர்:

### சிவகுமார் & சுசிலா மராக்

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுமார் 120 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ராஜ்ராணி இருதய நோயிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். பெரிய விபத்திலிருந்து அனில் மற்றும் அவரது மனைவியின் ஜீவனை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். வேலை நிமித்தம் புலம் பெயர்ந்து சென்ற விசுவாசி பப்லு மற்றும் அனார்கலி குடும்பம் பத்திரமாக வீடு திரும்பியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்தின் புதிய தொடர்பாளரான திமிரி கிராமத்தைச் சேர்ந்த சீமா சுவாச கோளாறிலிருந்து சுகம் பெற; திருமணமாகி ஏழு வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் கமர் கிராமத்தைச் சேர்ந்த ராதிகாவுக்கு தேவன் மனமிறங்கவும், அவரைக் கொடுமைப் படுத்தும் அவரது கணவன் மற்றும் மாமியார் மனந்திரும்பவும்; பர்போஜ் கிராமத்தைச் சேர்ந்த தரம்பாலுக்கு விபத்தினால் முகத்தில் ஏற்பட்ட காயங்கள் குணமடைய ஜெபிப்போம்.

## கிச்சா: பிபாபா பானி & பித்திகா

**துதிக்க:** 80 பேருக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டுள்ளது. அம்மன் என்பவர் ஜெபக் கூட்டம் நடத்த தன்வீட்டை திறந்து தந்துள்ளார். பூரண் வீட்டில் சத்சங் கூடுகை நடைபெற்றது. கோமுவரிசை கிராமத்தில் 10 பேர் ஜெபத்தில் கலந்துகொண்டனர். அதிக சுகவீனமாயிருந்த குருநாம்சிங்கின் எருமை மாட்டிற்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகம் தந்தமைக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போடோலி, சஜானா, நியூமங்கல், லால்பூர், கிசான்புரா, போடோரி, பிராதாப்பூர், கிச்சா, சுமோலைன், டோரேடாம், சாடிபுரி, நேபாளி காலனி போன்ற கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலை அருள; ஆகாஷ் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சுவிசேஷத் திற்கு தடையாயிருக்கும் குருத்துவாரின் அழுத்தங்கள் மறைய; கிறிஸ்தவ எதிர்ப் பாளர்களின் செயல்பாடுகளை தேவன் தடை செய்ய; ஞாயிறு ஆராதனை நடத்த ஏற்ற இடத்தை தேவன் அருளிச்செய்ய ஜெபிப்போம்.

# உத்தரப் பிரதேசம்

## ஹசேரன்: சுரேஷ் மால்தோ & பிரேம்லதா

**துதிக்க:** நமது விசுவாசி சத்தியம் மற்றும் அவரது தாயார் க்யான்மதி இருசக்கர வாகன விபத்திலிருந்து தேவானல் பாதுகாக்கப்பட்டனர். நீண்ட நாட்களாக பெலவீனப்பட்டிருந்த ரக்கன்பூரா கிராமத்தைச் சேர்ந்த அமன்குமார் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த பிரதீப் தன்னுடைய மனைவியின் இடைவிடாத ஜெபத்தினால் குடிப்பழக்கத்தி லிருந்து விடுபட்டு தொடர்ந்து ஆலயத்திற்கு வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கனிக்காபூர், பினோரா, பர்காசி, குவார்பூர், ஹரிகாபூர், சப்பா ஆகிய கிராம சபைகள் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற; சில விசுவாசிகள் மத்தியில் காணப்படும் ஜாதிப் பிரிவினைகள் நீங்க; மோட்டாகுர்வா மற்றும் ரோகினி சபைகளில் காணப்படும் மந்தநிலை மாற; விசுவாசத்தை விட்டு பின்வாங்கிச் சென்றுள்ளோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; சர்வேஸ் மற்றும் ராம்பாபு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

## 10 ஜனவரி வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாஷ்வா சின்னதுரை S.
திரு. சஞ்ஜீப் ஆனந்த், திரு. பவுலுஸ் பர்ஜோ
திரு. செல்வம் தவமணி, திரு. சாந்தகுமார் J.
திருமதி. ஹயோஜம் ஹிஜம்

### ஜாலவ்ன்: கவித் ராகேஷ் ரத்திலால் & ஈகார் ரேஷ்மா மாருதி

**துதிக்க:** மூன்று பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். ஐந்து வேதாகமங்கள் மற்றும் 10 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப் பட்டுள்ளது. மோங்கிரல் என்ற கிராமத்தில் புதிதாக ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ராம்புரா துணை பணித்தளத்தில் வளர்ந்து வரும் ஊழியங்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின் மந்தையில் இணைந்த மூன்று பேரும் விசுவாசத்தில் தொடர்ந்து வளர; புதிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலை அருள; ஜகத் கல்லீரல் வீக்கத்திலிருந்து பூரண சுகம் பெற; நரேந்திரன் குடும்பத்தில் தேவன் சமாதானம் அருளிச்செய்ய ஜெபிப்போம்.

### சிக்கந்ரா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** சுமார் 140 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 16 கிராமங்களில் பின்தொடர் பணி செய்யப்பட்டுள்ளது. ஹரிஹார்பூர், கோஜாஃபுல் மற்றும் சைனிபூர் கிராமங்களில் நடைபெற்ற பெண்கள் முகாமில் சுமார் 70 பேர் கலந்து கொண்டனர். கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களிடமிருந்து தேவன் நமது விசுவாசிகளை பாதுகாத்தார். ஜக்தேவ், இந்திரா குமார் மற்றும் சங்கீதா குடும்பத்தினர் கிறிஸ்துவுக்குள் வளர்ந்து தேவனுக்கு சாட்சியாய் வாழ்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகேஷ்பூர் கிராமத்தைச் சேர்ந்த ராம்பால், ஜித்தேந்திரா மற்றும் ஆகாஷ் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட; காக்குரியா, இங்வாரா மற்றும் நினோகரா ஆகிய கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; சாலேம்பூர், நந்துவாண்டு மற்றும் அலியாப்பூர் சபை ஆராதனையில் கலந்துகொள்வோர் தேவனுக்கு சாட்சிகளாய் வாழ; ஷிவானி, கஜோல், நீட்டு, சரத்குமார் ஆகியோருக்கு தேவன் ஏற்ற வேலையை அருளிச்செய்ய ஜெபிப்போம்.


## கிறிஸ்துமஸ் & புதுவருட கொண்டாட்டம் இளம் வாலிபர் பிரிவு - சென்னை கொளத்தூர்

இடம்:
இன்ஃபென்ட் ஜீசஸ் மெட்ரிக் பள்ளி,
விவேகானந்தா சாலை,
சென்னை - 99.

நாள்: 5.01.2025
ஞாயறு மதியம் 2.00 - மாலை 6.00

செய்தி: **Rev. R. டேனியல் டேவிட்,**
FMPB, Chennai.

பணித்தள செய்தியும் உண்டு

தொடர்புக்கு:
7806945522, 9941625418,
9841598653




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெயா ஹெலன் ரோஸ் செல்வகுமார்

### பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர்

**துதிக்க:** படினாபூர், பூர்வதீக்சாட், நாட்கடேரா ஆகிய மூன்று புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்திட தேவன் கிருபை செய்தார். பாய்சோலி கிராமத்தைச் சேர்ந்த மோஹர் ஸ்ரீயை பாம்பு கடியிலிருந்தும், மாமன் கிராமத்தைச் சேர்ந்த சஞ்ஜீவை வாகன விபத்திலிருந்தும் தேவன் பாதுகாத்தார். ராணி, சிநேகலதா மற்றும் அஹிவாரனை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். தீபக், வினய், பப்லு ஆகியோரின் திருமணங்கள் கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்றது. கிரண் சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்தும், பிரதாப் பக்கவாதத்திலிருந்தும், ரஜினி அம்மை நோயிலிருந்தும், சுதா கால் நரம்பு பிரச்சனையிலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேஹ்னா ஆலயத்தின் மேல் போடப்பட்டுள்ள வழக்கு விரைவில் முடிவடைந்து ஆலயம் திறக்கப்பட்டு மீண்டும் ஆராதனை ஆரம்பிக்கப்பட; சுதேச ஊழியர் ஷியாம் சுந்தர் நீதி மன்ற வழக்கிலிருந்து விரைவில் விடுபட; ரேகா மற்றும் ரஞ்சித்தை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; சபேரா மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கான எதிர்ப்புகள் நீங்க, குடி மற்றும் புகையிலை பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருப்போர் தேவனால் விடுவிக்கப்பட, பஞ்சாயத்து தலைவர்களான ராம்சந்தன் மற்றும் சரீப் நாத் ஆகியோர் தேவனால் தொடப்பட; கணவரை இழக்கக் கொடுத்து நான்கு சிறுப்பிள்ளைகளுடன் கஷ்டப்படும் விசுவாசி பினித்தாவுக்கு தேவன் உதவி செய்ய; நெஞ்சு வலியினால் அவதியுறும் சுதேச ஊழியர் ராதாவுக்கு தேவன் சுகமருள; மலோசி மற்றும் பிதுனாவில் ஆராதனை நடத்த ஏற்ற இடத்தை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### பால்: வெங்கடேஷ் வடார் & ஷீபா

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கை செய்துள்ளனர். பசாலி கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் மற்றும் அவரது மனைவிக்கு இடையே இருந்த பிரச்சனை நீங்கி சமாதானத்தோடு வாழ தேவன் கிருபை செய்தார். ஹல்கேடா கிராமத்தைச் சேர்ந்த அஞ்சிராவின் கணவர் தவறான பழக்கத்தினால் சிறையில் அடைக்கப்பட்டார். அஞ்சிராவின் தொடர் ஜெபத்தினால் அவரது கணவருக்கு ஜாமீன் கிடைத்தது. வீட்டிற்கு வந்த அவர் என் மனைவி வணங்கும் தெய்வமே உண்மையான தெய்வமென்றும், அவரால் தான் தனக்கு விடுதலை கிடைத்தது என்றும் சாட்சிகூறி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மந்திரவாதிகளையும், மருத்துவர்களையும் நாடிச் சென்று சுகம் கிடைக்காமல் மரிக்கும் தருவாயில் ஆலயத்திற்கு வந்து ஜெபிக்கும் மக்கள் சுகம் பெற்று இயேசுவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட; மூன்று வயது மகன் சூரஜ்க்கு தொண்டையில் உள்ள கட்டி அறுவை சிகிச்சையின்றி மறைய; மோர்வல் கிராமத்தைச் சேர்ந்த தவ்லிப்பின் அழுகிய கால்கள் குணமடைய; சத்தாபிரி கிராமத்தைச் சேர்ந்த சோனாரியா பக்கவாத்திலிருந்து சுகம் பெற; பன்கேடா கிராமத்தைச் சேர்ந்த ராகேஷ் மற்றும் ராவேர் கிராமத்தைச் சேர்ந்த ஜோதி மனநிலை பாதிப்பிலிருந்து விடுதலைபெற; வரான்கோன் கிராமத்தைச் சேர்ந்த முகேஷ் வலிப்பு நோயிலிருந்து சுகம்பெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. லவ்லின் புன்யா

# அசாம்

## கோகாமுக் & தகுவாகனா:
### டென்சிங் & கவிதா

**துதிக்க:** ஆறு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். ஜோத்து ரீகோம் என்ற விசுவாசியல்லாதவருக்கு இரைப்பை அறுவை சிகிச்சைக்குப் பின் நடக்க இயலாத சூழ்நிலையில் ஊழியர்கள் ஜெபித்த போது தேவன் சுகம் கொடுத்ததினால் அவரது முழு குடும்பமும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். காமன் சப்ரி, மேட் மோரா, சோரோக்டுக் மேடி, புவோனி போன்ற இடங்களில் சுவிசேஷத்திற்கு கிடைத்த திறந்த வாசலுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோகாமுக் பகுதியில் காணப்படும் அசுத்தாவியின் அந்தகார வல்லமைகள் முறியடிக்கப்பட; படுத்தப்படுக்கையிலுள்ள குளப்ரேகோமின் கணவருக்காக, அவர்களின் குடும்பத்தில் சமாதானம் நிலவ; தொடர்ந்து ஆலய ஆராதனையில் பங்கு பெறும் ஓயாயு பங்குங்கிற்கு காது கேளாமை & வாய் பேசமுடியாத நிலையிலிருந்து பரிபூரண சுகம் பெற; வியாதியினால் படுத்தபடுக்கையாயிருக்கும் நேரு பங்குங், தீப்பன் பங்குங் மற்றும் பிலாஷ் டேய்த் ஆகியோர் சுகம் பெற்று, இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## கோஹ்பூர்: நாத்தான் குமார்
### பெபர்த்தா & நிருபோமா

**துதிக்க:** சுமார் 400 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நான்கு இடங்களில் சிறுவர் கூடுகைகள் நடத்த தேவன் கிருபை செய்துள்ளார். ஒரு புதிய கிராமத்தில் இரவு கூடுகை மூலம் நற்செய்தி அறிவிக்க தேவன் உதவி செய்தார். டைபாயிடு காய்ச்சலிருந்து கிளாட்சன்னுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். சுவிசேஷ நற்செய்தி பிரதிகளை அநேகருக்கு விநியோகிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும் நாட்களில் திட்டமிட்டுள்ள ஊழியங்கள் தடையின்றி நடைபெற; புதிய விசுவாசிகள் கர்த்தரில் வேரூன்றி வளர; சுவிசேஷம் கேட்டோர் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபையில் இணைய; தைராயிடு பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள மிஷனெரியின் மனைவிக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## மகளிர் மாநாடு - 2025
### அம்பத்தூர்

இடம்: இம்மானுவேல் மெத்தடிஸ்ட் ஆலய சூசன்னா மண்டபம், புதூர்

நாள்: 14.01.2025 செவ்வாய் கிழமை
காலை 9 மணி முதல்
மாலை 4 மணி வரை

செய்தி: **திருமதி. மணிசெல்வி சாரதி,** FMPB, Chennai.

பணித்தள செய்தி:
**திருமதி. ஜெபராணி எபிநேசர்,** FMPB

தொடர்புக்கு: 9444944188




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஷைலன் ஹன்ஸ்தா

# பீஹார்

## அரரியா:

### ஜென்னிஸ் & சுகந்தி புஷ்பம்

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். ஐந்து கிராமங்களில் பின்தொடர் ஊழியம் நடைபெற்றது. அஜய்தாஸ் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டுவதோடு ஆலய ஆராதனையிலும் பங்கு பெற்று வருகிறார். புதிய தொடர்பாளரான மாதேபுரா கிராமத்தைச் சேர்ந்த அந்நூல் தேவி ஆராதனையில் கலந்துகொள்ள வாஞ்சைக் காட்டுவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீபக் ரிஷிதேவ் குடும்பத்தினர் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; சிட்சியா கலா கிராம மக்கள் இயேசுவின் அன்பினை அறிந்துகொள்ள; புதிய கிராம ஊழியங்களின் மூலம் அநேக தொடர்பாளர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

# ஜார்க்கண்ட்

## அமலகாச்சி:

### கஜன் சம்பிரமரி & ரோஷிலா

**துதிக்க:** ஏழு பேர் இயேசுவே மெய்யான தெய்வம் என்று அறிக்கை செய்துள்ளனர். நமது விசுவாசிகளுக்கு நவீன விவசாய பயிற்சி அளிக்கப்பட்டது. தலாய் பஹாரின் 17 வயது மகன் சுகவீனப்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சைப்பெற்று வந்த நிலையில் பணம் பற்றாகுறைக் காரணமாக வீட்டிற்கு அழைத்து வந்து, நமது விசுவாசிகளை அணுகி ஜெபிக்க கேட்டுக்கொண்டார். ஜெபத்தைக் கேட்ட தேவன் மகனுக்கு பரிபூரண சுகம் தரவே தற்போது குடும்பமாய் ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தலாய் பஹார் கிராமத்தில் நடைபெறவுள்ள கிறிஸ்துவை அறிக்கை யிடும் நிகழ்ச்சி மற்றும் சந்தனடங்கா கிராமத்தில் நடக்கவிருக்கும் மூப்பர் கூடுகை, வாலிபர் முகாம் போன்றவை தடையின்றி சிறப்பாய் நடைபெற; புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள நான்கு குடும்பங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் ஏழு சுதேச ஊழியர்களுக்காக ஜெபிப்போம்.

### ஜமா: முன்னா மொகந்தியர் & சுமித்தா தாஸ்

**துதிக்க:** 15 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். இவ்வருடம் நல்ல விளைச்சலைத் தந்த தேவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக அறுப்பின் பண்டிகை அநேக சபைகளில் அனுசரிக்கப்பட்டது. சபை மூப்பர், சுதேச ஊழியர்களின் குடும்பக் கூடுகை மற்றும் சிறு ஜெபக்குழுக்களுக்கான கூடுகை சிறப்பாய் நடைபெற தேவன் கிருபை செய்தார். 10 இடங்களில் திரையிடப்பட்ட இயேசு திரைப்படத்தைத் திரளானோர் கண்டு இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்ள உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வலிப்பு நோயினால் பாதிக்கப் பட்டுள்ள அனிதா சோரன், கணேஷ் மற்றும் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ராம்தான் சோரன் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; கண்பார்வை குறை பாட்டினால் தவிக்கும் கன்கி மராண்டி மற்றும் ரோஸ்பெல்லாவுக்கு தேவன் சுகம் தர; அனைத்து ஜெபக்குழுக்களும் தடையின்றி கிரமமாக நடைபெறவும், அதை நடத்த படித்த விசுவாசிகள் முன்வரவும் ஜெபிப்போம்.




## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஐசக் ஆபேல் S.

### தீன்பஹறார்:

**நெகேமியா & அனாமிகா பெகு**

**துதிக்க:** பெல்பஹறாடி கிராமத்தில் நமது விசுவாசிகளால் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப் பள்ளியில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பங்குபெற்று ஆசீர்வதிக்கப்பட்டனர். ஆறு பேர் இயேசுவே மெய்யான தெய்மென்று அறிக்கை யிட்டுள்ளனர். மனநிலை பாதிக்கப்பட்டிருந்த நமது விசுவாசி சீமா டோப்போ ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். தனது பெற்றோருக்கு கீழ்ப்படியாமல் வாழ்ந்த ரவிசிங்கின் வாழ்வில் மாற்றத்தை தந்து, தற்போது சபை நிகழ்ச்சிகளை அவரே தலைமைத்தாங்கி நடத்திவர கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மண்டல் முண்டா குடும்பத்தினர் ஆலயத்திற்கு வருவதை தடைசெய்யும் கிராமத்தினர் இயேசுவின் அன்பினால் தொடப்பட; ஆர்த்தி தேவியின் விசுவாசத் திற்கு தடையாய் இருக்கும் அவரது கணவர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; கமாடியா திர்க்கி குடும்பத்தில் காணப்படும் பிரச்சனைகள் நீங்கி சமாதானமாய் சேர்ந்து வாழ; சுவிசேஷத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் பீர்பல் லக்ரா தேவனால் தொடப்பட ஜெபிப்போம்.

### சஹறர்ஜுடி:

**முத்தையா சாமுவேல் & மார்கரெட்**

**துதிக்க:** இரண்டு பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். ஒன்பது இடங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது. கட்டல்டா ஆலயக் கட்டுமானப் பணிகள் தடையின்றி நடைபெற்று வருகிறது. வேலை நிமித்தம் வெளி மாநிலத்திற்கு சென்ற சோக்மணி சபை மூப்பர் மனோஜ் முர்மு அங்கு மயங்கி விழுந்த நிலையில் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்திலுள்ள நமது விசுவாசிகள் ஒவ்வொருவரும் ஆத்தும அறுவடைப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள; எட்டு வருடங்களாக குழந்தைக்காக ஜெபித்து வரும் நமது சுதேச ஊழியர் பாபுஜி கிஸ்கு குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியமருள; கண் பார்வை இழந்துள்ள ஸ்ரீஃபுல் டுடுவுக்கு தேவன் அற்புதம் செய்ய; சர்வாயே கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

### அமரபாடா:

**வியாசு பாபு &சௌந்தர்ய ரேகா**

**துதிக்க:** 24 பேர் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். 14 கிராமங்களில் சுமார் 1571 பேருக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. விசுவாசிகளின் வயல்களில் நல்ல அறுவடையை தேவன் கட்டளையிட்டுள்ளார். பாஸ்கோ கிராமத்தைச் சேர்ந்த மனுவேல் ஹன்ஸ்தா மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கள்ள போதகர்கள் மற்றும் கள்ள போதகத்திற்கு நமது விசுவாசிகள் செவிசாய்க்காமல், தேவ வார்த்தையில் வேரூன்றி நிலைத்திருக்க; கலிதோஹா கிராமத்தில் விசுவாசிகளை பயமுறுத்தி வரும் மந்திரவாதி கோபேஸ்வர் ஹெம்ரோம் தேவனின் அன்பினால் தொடப்பட; தனது 5 வயது மகனை இழந்துள்ள விசுவாசி தீனா ஹன்ஸ்தக்கிற்கு தேவன் ஆறுதலைத்தர; கதிக் ஹெம்ரோம் வலிப்பு நோயிலிருந்தும், ஜோகர்நாத் பாஸ்கி சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.




*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷைனி ஜோசப்
திருமதி. சுகந்தி சாலமோன்

## ஹன்ஸ்டிகா: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** 15 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். 17 கிராமங்களில் சுமார் 660 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சப்பாராம் சேகரத்திலிருந்த அனைத்து ஆராதனைக் குழுக்களும் சபையாக வளர்ச்சியடைய செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொடாசப்பட், லட்டிபாடி, தபாய், ரங்கினியா, ஆம்கச்சி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் மக்கள் விரைவில் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இந்திய ராணுவத்தில் பணிபுரியும் சிபுலால் மேஜருக்கு குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுதலை தர; கிராம மக்களின் எதிர்ப்பினால் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கி போன சர்கரா கிராமத்தைச் சேர்ந்த 3 குடும்பங்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## நோனிஹாட்: பென்ஹர் எம். & மேரி ஜான்சி ராணி

**துதிக்க:** 11 பேர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். எட்டு கிராமங்களில் படக்காட்சி ஊழியங்களின் மூலமாகவும், 16 கிராமங்களில் இரவு கூட்டங்கள் மூலமாகவும் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். புத்துமராண்டி ஜெபத்தின் மூலம் கண்பார்வை பெற்றுள்ளார். தலாமாய் மராண்டிக்கு பக்கவாதத்திலிருந்து சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளும் டேராம்முருங்கை மற்றும் லட்சு சோரன் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய; நிவானி, சாந்தனா, ரோத்தன்பூர், கருவா, சித்தியாபாரி ஆகிய கிராமங்களில் படக்காட்சி மூலம் சுவிசேஷம் அறிவிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; குஜி கிராமத்தைச் சேர்ந்த பஹாபெஸ்ரா பக்கவாதத்திலிருந்து சுகம்பெற; கோர்டிகா கிராமத்தில் அனில் கிஸ்கு, சனி முர்மு ஆகியோருக்கு தேவன் கண்பார்வை அருள ஜெபிப்போம்.

## தவகொட்டா சிறுவர் மேம்பாட்டு மையம் & விடுதி:

### ஜாண்சன் ராஜதுரை & வினோதினி

**துதிக்க:** கிராம சிறுவர்களுக்கான கல்வி திட்டங்கள் பரம்பி, தம்ருபிட்டா, பட்டுவாடே, சோட்டாஜாரா மற்றும் புசேரா கிராமங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 19 இடங்களில் விசுவாசிகளுக்காக நடத்தப்பட்ட கால்நடை மற்றும் வேளாண்மை முகாம் களில் சுமார் 1110 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். ஒருமாத கல்வி திட்டத்தை 13 சிறுமியர்கள் முடிப்பதற்கு உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிராம கல்வி திட்டத்திற்கு பெற்றோர் மற்றும் கிராம மக்களின் ஆதரவு கிடைக்க; வாலிபர்களுக்கான கையேடு, ஞாயிறு பள்ளி பாட புத்தகம், வாழ்வின் ஒளி புத்தகம், மால்தோ பத்திரிக்கை ஆகியவை வெளியிட நடக்கும் ஆயத்தப்பணிகளில் தேவன் உதவி செய்ய; முதியோர் கல்வி திட்டத்தின் மூலம் அனைவரும் கல்வி அறிவு பெற்று வேதாகமத்தை வாசிக்க; மால்தோ விசுவாசிகளின் வாழ்வாதார முயற்சிகளில் தேவன் வெற்றி அருள; விசுவாசிகளின் புலம் பெயர்தல் குறையவும், இவர்களுக்கான முன்னேற்ற திட்டங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. தெபொரா ரோஸ்லின் அருள்ராஜ்

# மேற்கு வங்காளம்

### பாக்குவாஹாட்:
### ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** ஐந்து பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவரை அறிக்கையிட்டுள்ளனர். திடீரென மரித்துப்போன நீம்டுங்கா கிராமத்தின் விசுவாசி ஹோப்னி டுடுவை எவ்வித தடையுமின்றி அடக்கம் செய்ய தேவன் உதவி செய்தார். சில்டானி, மானிக்பூர், உலாத்தூர் மற்றும் நீம்டுங்கா கிராம சபைகளில் முதன்முறையாக அறுப்பின் பண்டிகை கொண்டாடப்பட்டது. நமது சபை மூப்பரின் மகன் பிரிக்சனுக்கு கம்ப்யூட்டர் கடை திறக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில்டானி மற்றும் நீம்டுங்கா கிராமங்களில் தொடங்கப்பட்டுள்ள முதியோர் கல்வி திட்டம் தடையின்றி சிறப்பாக செயல்பட; ஊழியத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் லத்தர் சோரன், சிபு டுடு ஆகியோர் மனந் திரும்பி இரட்சிக்கப்பட; வேலை நிமித்தம் புலம்பெயர்ந்து சென்றுள்ள விசுவாசிகள் இருக்கும் இடங்களில் தங்கள் சாட்சியை காத்துக்கொள்ளவும், விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.

### இட்டாஹார்:
### அஸ்தபான் ஆதித்திய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** 24 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் மூலம் சுமார் 677 பேர் முதன்முறையாக நற்செய்தி கேட்டனர். உதய்பூர், டில்னோ-ஹடட்பாடா, புல்பாடியா, பஸ்துபி கிராமங்களைச் சேர்ந்த 18 பேர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சக ஏற்றுக் கொண்டனர். 7 இடங்களில் நடைபெற்ற திரைப்பட ஊழியத்தின் மூலம் அநேகர் இயேசுவின் அன்பைப்பற்றி அறிந்துகொண்டனர். 7 கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. விசுவாசிகளின் கூடுகை, சிறு ஜெபக் குழுக்கள், சபை மூப்பர்களுக்கான பயிற்சிக் கூடுகைகள் யாவும் தடையின்றி சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். சோனாடங்கி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி குபிதா டுடுவை வாகன விபத்திலிருந்து தேவன் அற்புதமாய் பாதுகாத்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக நற்செய்தி அறிவிக்கப் பட்டுள்ள கிராமங்களிலுள்ளவர்கள் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட; மஞ்சிலி பாஸ்கி, ஹுமோனி கிஸ்கு, ரூபோனி கிஸ்கு, போரன் டுடு ஆகியோர் காச நோயினாலும், மாலோதி ஹன்ஸ்தக் மூளைக் கட்டியினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். தேவன் இவர்கள் அனைவருக்கும் பரிபூரண சுகமருள; நமது சுதேச ஊழியர் சுஜன் ஹெம்ரோம், தாக்கூர் பெஸ்ரா, சோனாலி முர்மு ஆகியோரின் குடும்பங்களை தேவன் குழந்தை செல்வதினால் ஆசீர்வதிக்க; கணவனை இழந்துள்ள நமது மிஷனெரியின் சகோதரிகளான அனுபமா & ஆம்பி நிருபமா ஆகியோரின் அறுதலுக்காகவும், அவர்களின் பிள்ளைகளின் கல்வி மற்றும் எதிர்க்காலத்திற்காகவும் ஜெபிப்போம்.

**17 ஜனவரி**
**வெள்ளி**

### கரன்டிகி: கய்தியென்ஜின் வய்ஃபெய் &மெலடி டிம்சோன்டிங்

**துதிக்க:** கடந்த மாதம் அனைத்து ஊழியங்களும் தடையின்றி சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். 13 புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, சுமார் 501 பேர் முதன்முறையாக நற்செய்தி கேட்டுள்ளனர். புதிய கிராமங்களில் வெளிப்புற ஊழியம் செய்ய தேவன் உதவி செய்தார். நீண்ட நாட்களுக்குப் பிறகு சாட்னி கிராமத்தில் ஆராதனைக்குழு துவங்க தேவன் கிருபை செய்தார். பெலவீனங்களினால் பாதிக்கப்பட்டிருந்த நமது விசுவாசிகள் சர்க்கார் கிஸ்கு, மாரி டுடு, மொங்குசி குடும்பத்தினர் மற்றும் சிபாலி ஹெம்ரோம்க்கும் ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக நான்கு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கவும், 8 கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்படவும், 10 இடங்களில் இரவு கூட்டங்களின் மூலமாக நற்செய்தி அறிவிக்கும் பணி தடையின்றி நடைபெற; புதிதாக நற்செய்தி அறிவிக்க திட்டமிடப்பட்டுள்ள சோகில், பெல்பாரி, மருதாங்கி, லஹதலா, குவாபரி, இடடோலா, அல்தாபூர், குண்டர்காவ், பனியல் சிடுங்டோலா, சாதிபூர் ஆகிய கிராமங்களில் தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; உல்குடு கிராமத்தில் வாழும் ஒரே விசுவாச குடும்பமான முன்னா பாஸ்கி மது பழக்கத்திற்கு அடிமைப்பட்டு, குடும்பத்தில் சமாதானமின்றி ஆலயம் வருவது தடைப்பட்டுள்ளது. அவர் மனந்திரும்பி மதுப்பழக்கத்திலிருந்து விடுதலைபெற்று மீண்டும் ஆலய ஆராதனையில் குடும்பத்துடன் பங்கு பெற; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள மக்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; சோஹர்காவ், மஜோக், பத்தர், குசியாமரி, செஸ்ரா கிராமங்களில் சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்கள் மனந்திரும்ப; நடக்கவும், நிற்கவும் முடியாமலிருக்கும் 6 வயது சிறுவன் சுதீப்க்கு தேவன் அற்புதம் செய்ய ஜெபிப்போம்.

## மந்திரவாதியும் மனந்திரும்பினார்

*ஜார்கண்ட் மாநிலம் அமலாகாச்சி பணித் தளத்தில் மலையடிவாரத்தில் அமைந் துள்ள கிராமம் நோடி. இந்த கிராமத்தில் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி நடைபெற இருந்ததினால் மக்கள் சபையில் திரளாய் கூடியிருந்தனர். அப்போது, அப்பகுதியில் ஊழியத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து, மந்திரங்களை செய்து கிராம மக்களை தன்னுடைய ஆதிக்கத்தில் வைத் திருந்த குர்கி தம்பதியினர் வந்து ஊழியரை தங்கள் வீட்டிற்கு அழைத்தனர். அவர்கள் வீடு மலை உச்சியில் ஊரைவிட்டு தூரமாக அமைந்துள்ளதால் அங்கே போவது உச்சிதமல்ல என்று சபை மக்கள் தடுத்தனர். ஆனாலும் ஊழியர் சக ஊழியர்களோடு அவர்கள் வீட்டிற்குச் சென்றார். அங்கே பூஜை பொருட்கள் மற்றும் மந்திரம் செய்ய பயன்படுத்தும் கருவிகள் அனைத்தும் வீட்டின் வெளியே குவித்து வைக்கப்பட்டிருக்க, மந்திரவாதி குர்கி, தானும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதாகவும், இந்த பொருட்களை ஜெபித்து எரித்துவிடும்படியும் ஊழியரைக் கேட்டுக்கொண்டார். ஊழியரும் சந்தோஷமாக அதனை ஏற்றுக்கொண்டு ஜெபித்து நிறைவேற்றினார். தற்போது குர்கி குடும்பமாக விசுவாசிகளாகி தேவனை மகிமைப்படுத்தி வருகின்றார். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. விஜயா ஜாய்சன்

### ராணிகஞ்ச்: துருபராஜ் பெபர்த்தா & புஷ்பாஞ்சலி

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவுக்குள் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். ஒன்பது புதிய கிராமங்களில் நடத்தப்பட்ட இரவுக் கூட்டங்களில் சுமார் 1050 பேர் நற்செய்தி கேட்டுள்ளனர். 10 கிராமங்களில் எவ்வித தடையுமின்றி இயேசு திரைப்பட ஊழியம் செய்ய தேவன் உதவி செய்தார். பாம்பு கடியிலிருந்து சுனிதா முர்முவை தேவன் பாதுகாத்தார். சுவாசப் பிரச்சனையிலிருந்து திரு. நோஹாவுக்கு தேவன் சுகமருளினார். திருச்சபையில் அறுவடை திருநாள் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. திருமதி. முலிகா மார்ட்டிக்கு பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலையைக் கட்டளையிட்டார். இரண்டு வாலிபர்கள் தன்னார்வ ஊழியர்களாக நமது இயக்கத்தில் இணைந்துள்ளனர். டானோ கிராமத்தில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை தந்துள்ளார். ஹிசிமாசி சபை மூப்பர் திரு. சுனில் சோரனுக்கு விபத்தில் கை எலும்பு முறிவு ஏற்பட்டபோதிலும் ஜீவனை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இம்மாதம் நடைபெறவுள்ள அனைத்து ஊழியங்களும் தடையின்றி ஆசீர்வாதமாய் நடைபெற; இப்பனிக் காலங்களில் அனைத்து ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் குடும்பங்களை தேவன் பாதுகாத்து, நல்லாரோக்கியத்தைக் கட்டளையிட; நற்செய்தி அறிவிக்கும் பணியில் விசுவாசிகள் தங்களை உற்சாகத்துடன் ஈடுபடுத்திக்கொள்ள; இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயுள்ள மக்கள் முழுமனதுடன் அவரை விசுவாசித்து அறிக்கையிட; புஜுபிதா பகுதியில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிபோயுள்ள மக்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; ஞாயிறு ஆராதனை மற்றும் ஆத்தும அறுவடை பணியில் விசுவாசிகள் மற்றும் சபை மூப்பர்கள் ஆர்வத்துடன் பங்கு பெற ஜெபிப்போம்.

## கண்ணீரைத் துடைக்கும் தேவன்

*ஜார்கண்ட் மாநிலம், அமலாகாச்சி பணித்தளத்தில் அமைந்துள்ள தரணி பஹார் கிராமத்தில் ஜெபக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது வயதான அம்மா ஒருவர் வந்து தன்னுடைய வீட்டிற்கு ஜெபிக்க அழைத்தார். அங்கே ஜெபிக்க ஊழியர்கள் சென்றபோது, தன்னுடைய வாலிப மகன் நாராயணன் மும்பைக்கு வேலைக்குச் சென்றதாகவும், அவனுடன் சென்றிருந்த மற்ற வாலிபர்கள் வீட்டிற்கு திரும்பிய பிறகும், அவருடைய மகன் மட்டும் திரும்பி வரவில்லை என்றும், எங்கு சென்றான் என்ற தகவல் இல்லாததால் மனதுயரப்பட்டு கண்ணீரோடு வாழ்வதாகவும் அந்த வயதான அம்மா தெரிவித்தார். நமது ஊழியர்கள் அவரின் மகனுக்காக ஜெபித்து வந்தனர். மறுநாள் முகம் தெரியாத நபர் ஒருவர் நாராயணனை தூக்கிவந்து அவரின் வீட்டின் திண்ணையில் படுக்கவைத்துவிட்டு சென்றுவிட்டார். சுகவீனமாக இருந்த நாராயணன் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். அம்மாவும், மகனும் தொடர்ந்து ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருகின்றனர். தேவனுக்கே மகிமை!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஐசக் தனசிங் R.

## தபான்:

### ஹரமோகன் பிரபுதாஸ் நாயக் & சூசம்மா

**துதிக்க:** 14 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். பாஸ்தா கிராமத்தில் நடத்தப்பட்ட இளைஞர்கள் பயிற்சி கூடுகை மற்றும் நக்தஹாரில் நடை பெற்ற விசுவாசிகளின் முகாம் ஆகியவை ஆசீர்வாதமாக நடைபெற தேவன் உதவி செய்தார். மின்சார தாக்குதலிலிருந்து சபை மூப்பர்கள் ராபின் முர்மு மற்றும் பர்மல் முர்மு கர்த்தரால் பாதுகாக்கப்பட்டனர். காது பிச்சனையிலிருந்து சுரேஷ் கிஸ்கு, வாய் புண்ணிலிருந்து டிகுலின் ரேமா ஹெம்ரோம், முதுகு வலியிலிருந்து மாயோ மராண்டி, டைபாய்டு காய்ச்சலிலிருந்து சுனில் கிஸ்கு ஆகியோருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். அறுவடைத் திருநாளை விசுவாசிகள் மகிழ்ச்சியுடன் கொண்டாட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மற்றும் பின்தொடர் பணிகள் தடையின்றி நடைபெற; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் மொஹேந்திரா பகுதியில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தேவன் விரைவில் எழுப்பித்தர; நற்செய்திக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சக்லா பாஸ்கி, புடகுமின் பால்டன் ஹெம்ரோம், சல்பாரியின் கபிராஜ் முர்மு, போலோமின் உடம் டுடு ஆகியோர் தேவனின் அன்பினால் தொடப்பட; சுதேச ஊழியர் ராஜு முர்மு குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; கலிதோலா, பஞ்சதா, சந்தோஷ், பிண்டிடோலா, சியாகாஜி, சகட்டோலா ஆகியோர் இரட்சிக்கப்பட்டு, இயேசுவே தெய்வமென்று அறிக்கையிட; ஊர்மிளா டுடு அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற; சுனிதா சோரன் உடல் பெலவீனம், பயம், காது கேளாமை ஆகிய பாதிப்பிலிருந்தும், சுந்தரி ஹன்ஸ்தா சிறுநீரக பிரச்சனையிலிருந்தும், ரகேஷ் முர்மு சரீரத்தில் ஏற்பட்டுள்ள காயங்களிலிருந்தும், மனிஷா கிஸ்கு வெள்ளை தழும்புகளிலிருந்தும் பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.

## *வெற்றியின் வேந்தன்*

*மேற்குவங்க மாநிலம், பாக்கூர்ஹட் பணித் தளத்திலுள்ள நீம்டுங்கா கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி சகோதரி ஹோப்னி டுடு திடீரென மரணமடைந்துவிட்டார். அவரது கணவர் முன்பே மரணமடைந்த சமயத்தில் இரு மகன்களும் வேலையினிமித்தம் வெளி மாநிலங்களுக்கு சென்றிருந்தனர். மரணமடைந்தவரை அடக்கம் செய்ய ஊரார் ஒருவரும் முன்வரவில்லை. பிற விசுவாசிகள் உதவியுடன் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. மறுநாளே அடக்கத்திற்கு உதவின சுர்ஜித் முர்மு மற்றும் காரு ஹன்ஸ்தா சுகவீனமாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இது பிசாசின் வேலை என்றும், சாபம் அவர்களை தொற்றிக்கொண்டது என்றும் ஊரார் பேச தொடங்கிய நிலையில், விசுவாசிகள் ஒருமனப்பட்டு அவர்களுக்காக ஜெபித்தபோது இவ்விருவரும் பரிபூரண சுகம் பெற்று வீடுதிரும்ப தேவன் கிருபை செய்தார். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. செலினா மராண்டி ரபீந்திர முர்மு

### சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** நான்கு கிராமங்களில் திரைப்பட ஊழியம் நடைபெற்றது. 12 பேர் இயேசு கிறிஸ்துவில் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். மாரி மற்றும் ஓடம்புக்காரி கிராமங்களில் வெள்ளிக் கிழமைதோறும் ஜெபக் கூடுகை நடைபெற்று வருகிறது. விசுவாசத்தில் பின்வாங்கிபோன தாலுஹன்ஸ்தாவின் குடும்பம் மூன்று வருடத்திற்குப் பின் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். விசுவாசி சஞ்சய் ஹன்ஸ்தா இரவு நேரத்தில் உடல்நிலை மிக மோசமானபோது குடும்பத்தினரின் அழுகையின் ஜெபித்தக் கேட்ட தேவன் மறுதினமே அவருக்கு பூரண சுக மருளினார். ஜித்தல்பூர் கிராமத்தைச் சேர்ந்த கங்காமுனி தன் கணவரின் ஜெபத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய கிராமங்களான பசந்தா மற்றும் குஷ்கஹாவில் ஆராதனைக்குழு ஆரம்பிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; லஸ்கர்பூர் கிராமத்தில் குடிக்கு அடிமைப்பட்டுள்ள மற்றும் பின்வாங்கிபோன விசுவாசிகள் மனந் திரும்பி இரட்சிக்கப்பட; மோடிபூர் கிராமத்தில் நமது ஊழியத்திற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் லால் முர்மு, லாலு பெஸ்ரா, ஜோபே டுடு ஆகியோரின் இருதயத்தில் தேவன் இடைபட; உதம்புக்காரி கிராமத்தில் ஹோபோன் ஹன்ஸ்தா, ரோபன் சோரன், ஜோபா ஹன்ஸ்தா, மக்கலு ஹன்ஸ்தா, கோடாடோலா கிராமத்தில் புத்ரை ஹெம்ரோம், மொங்கோல் டுடு, ஜித்தால்பூர் கிராமத்தின் நைகா மராண்டி ஆகியோர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க; வாரி கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற இடத்தை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

## ஒடிசா

### ஜகன்நாத்பூர்:

### பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ, சுரேஷ் மால்தோ

**துதிக்க:** 18 பேர் இயேசு கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். இரண்டு வெளிப்புற ஊழியத்தின் மூலம் 12 கிராமங்களில் சுமார் 2717 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 3 வேதாகமங்களும், 32 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. மஜ்கோன் குருசேகரத்தின் சார்பாக வாலிபர் சுவிசேஷ குழு புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பராஜம்டா ஆலயத்தில் பயிற்சி கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. புதிய இன மக்கள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராதனைக் குழுக்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாத நோயினால் பாதிக்கப் பட்டுள்ள தர்தாரியா சபையைச் சேர்ந்த சந்தீப் திரியாவுக்கு தேவன் சுகமருள; சுக்லால் லகுரி வலிப்பு நோயிலிருந்தும், பிஷ்ணு பிங்குவா காசநோயிலிருந்தும், பக்வான் லகுதி (12 வயது) வலிப்பு நோயிலிருந்தும் பூரண குணமடைய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பிரேமலதா டேனியல் தாமஸ்
செல்வி. சாந்தி முர்மு

### ஜிங்பானி:
### ஆபிரகாம் எஸ். & அலீஸ் ஷீபா

**துதிக்க:** ஹோ இன விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் இருந்து தங்கள் உறவினர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து வருகின்றனர். 15 பேர் இயேசு கிறிஸ்துவில் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். விசுவாசிகளின் உதவியுடன் ஐந்து புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்திட தேவன் உதவி செய்தார். புதிய விசுவாசியான ஜெய்ஸ்ரீ பாரியின் சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். அர்ஜுன் டாம்சாயின் வறண்ட நிலத்தில் தேவன் நல்ல அறுவடையைக் கட்டளையிட்டார். சந்துகுய் காச நோயிலிருந்தும், ராமுபோட்ரா கடுமையான இடுப்பு வலியிலிருந்தும் சுகம்பெற்றனர். சுரங்க விபத்திலிருந்து சேமான் மச்சுவாவை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோக்சோ, துய்பானா, சோனாபோசி, சாய்பாசா ஆகிய கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட; தேவனை ஏற்றுக்கொள்ள வாஞ்சைக் காட்டும் மனோஜ் பூர்த்தி, சங்கீதா பூர்த்தி, குரே பூர்த்தி, ட்ரோபாடி பூர்த்தி ஆகியோர் தடையின் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட; புக்ரிபீ குருசேகர விசுவாசிகள் விசுவாசத்திலும், சாட்சியான வாழ்விலும் வளர; மபுரு கிராமத்தில் விசுவாசிகளை அச்சுறுத்தும் மக்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; சபை மூப்பர் சிரம்பாரிக்கு சுரங்கத்தில் வேலை கிடைக்க; ஆத்தும பாரம் கொண்ட சுதேச ஊழியரை தேவன் ஊழியத்திற்கு அருள; இரத்த வாந்தியிலிருந்து பார்வதி பூர்த்தி, பக்கவாதத்திலிருந்து சூசன்பன்ரா, கண் பிரச்சனையிலிருந்து சலோமி ஆகியோரை தேவன் குணபடுத்த ஜெபிப்போம்.

## குஜராத்

### ஜாலோத்: குமார் பால் & அமுதா

**துதிக்க:** 23 பேர் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிந்து கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். லக்கன்பூரில் நடைபெற்ற வாலிபர் முகாமில் சுமார் 250 பேர் பங்குபெற்று தேவ ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர். கேடியா மற்றும் வகோலாவில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டங்களில் சுமார் 150 பேர் கலந்து கொண்டு விசுவாசத்தில் தங்களை உறுதிப்படுத்திக்கொண்டனர். லக்கன்பூரில் நடைபெற்ற சிறுவர் சிறப்புக் கூடுகையில் 45 சிறுவர்கள் கலந்துகொண்டு வேத வசனங்களை கற்றுக்கொண்டனர். கண்டி என்கிற கிராமத்தில் புதிதாக ஆராதனை குழு ஆரம்பிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராம்பூராவில் வசிக்கும் ரிங்பேனின் முழங்காலில் நீண்ட நாட்களாக ஆறாமலிருக்கும் புண் விரைவில் குண மடைய; பாயல், சரளா, மார்த்தா மற்றும் அரவிந்த் குடும்பங்களை தேவன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்க; கேடியா ஆலயத்திற்கு மின் இணைப்பு விரைவில் கிடைக்க; கால் எலும்பு வளைந்துள்ளதால் நடக்க முடியாமல் கஷ்டப்படும் ஜலாம்பூரைச் சேர்ந்த சோமா பாயிக்கு தேவன் அற்புதம் செய்ய; வரும் நாட்களில் நடத்த திட்டமிட்டிருக்கும் சபை மூப்பர் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.




## அஹ்வா :

**விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.**

**துதிக்க:** சுமார் 128 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். விபத்தில் தலையில் ஏற்பட்ட பலத்த காயத்தினால் பேசமுடியாமல் போன இமல்பேனுக்கு ஜெபத்தின் மூலம் மீண்டும் பேசும் திறனை தேவன் அருளினார். ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு ஜெபத்தின் மூலம் நீருபேன் குழந்தை பாக்கியம் பெற்றுக்கொண்டார். நீண்ட நாட்களாக நெஞ்சு வலியினால் கஷ்டப்பட்டு வந்த விஜய் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். அம்சர்வலன் கிராமத்தில், இரவு நேரத்தில் தன் வீட்டின் முன் உட்கார்ந்திருந்த விசுவாசி அஸ்வின்பாயின் மீது புலி பாய்ந்தபோது, அவர் இயேசுவே என்று கூக்குரலிட புலியிடமிருந்து அவரைக் காப்பாற்றிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்தினால் பாதிக்கப் பட்டுள்ள சபை மூப்பர் ராம்சந்திபாய் விரைவில் சுகம்பெறவும், தடைபட்டுள்ள மோக்ரா கிராம ஆலயக் கட்டுமான பணிகள் விரைவில் துவங்கப்படவும்; டுங்கர்டா கிராம ஆலய கட்டுமானப் பணிகள் விரைவில் முடிந்து மங்கலப் படைப்பு செய்யப்பட; அம்சர்பாடா கிராமத்தில் ஊழியத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கும் கிரண்பாய் தேவனால் சந்திக்கப்பட; புதிதாக விசுவாசத்தை அறிக்கையிட்டுளோர் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க ஜெபிப்போம்.

## விஜயநகர்:

**விஜயகுமார் கே. & சுஷீலா**

**துதிக்க:** 12 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்துள்ளனர். வலிப்பு நோயினால் கஷ்டப்பட்டு வந்த டெகிஹா பேன் தொடர் ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகம் பெற்றார். புதிய விசுவாசியான கீதா பேன் திடீரென சுகவீனப்பட்டதோடு அவரது கால்நடைகளும் சுகவீனப்பட்டு மரிக்க ஆரம்பித்தன. இது சாத்தானின் செயல் என்று புரிந்து கொண்ட அவர் உபவாசித்து ஜெபித்த போது தேவன் எல்லா உபத்திரவங்களிலிருந்தும் கீதாபேனை விடுவித்தார். வயிற்றுப் பிரச்சனையிலிருந்து பீனா குமாரி சுகம்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரத்த வாந்தியினால் கஷ்டப்பட்டு வரும் அவினாஷ் மற்றும் ஹிராலால் பரிபூரண சுகம்பெற; காமனிபேன் ஒவ்வொரு முறையும் ஆலயம் செல்லும்போது சுகவீனத்தை ஏற்படுத்தும் பிசாசின் தந்திரங்கள் முறியடிக்கப்பட; சரீரம் முழுவதும் கட்டிகளினால் கஷ்டப்பட்டு வரும் பிரபுவாலின் மனைவிக்கு தேவன் பரிபூரண சுகமருள; நிலத்தின் மோட்டார் அடிக்கடி பழுதாகிவிடுவதால் தண்ணீர் பிரச்சனையினால் கஷ்டப்படும் விசுவாசி சாந்திலாலுக்கு தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மேத்யூ K.
திரு. குமார் V.

## சூரத்:

### மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** ராஜ் குமாரி விடுமுறைக்கு சொந்த மாநிலமான உத்தரப்பிரதேசம் சென்றிருந்தபோது அங்கு சுவிசேஷம் அறிவித்து இரண்டு பேரை ஆண்டவருக்குள் வழிநடத்த தேவன் உதவி செய்தார். விசுவாசத்தினிமித்தம் அண்டை வீட்டாரின் எதிர்ப்பினை சந்தித்து வந்த நைனாபேனுக்கு வேறு நல்ல வீட்டிற்குச் செல்ல கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சூரத் நகர் ஆலயம் மாநகராட்சியினால் உடைக்கப்பட்டது. வாடகைக்கு எடுத்திருந்த டவுன்ஹாலும் இடிக்கப்பட்டுவிட்டது. ஆகவே ஆராதனை நடத்த ஏற்ற இடம் கிடைக்க; கவிதாபேனின் மகன் பெற்றோருக்கு கீழ்படிந்து, தேவனுக்கு பயந்து வாழ; சுனிதாபேனின் தீராத தலைவலி நீங்கி பூரண சுகம் பெற; சூரத் நகர் பகுதி ஊழியத்திற்கு அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித் தர ஜெபிப்போம்.

## போடோலி & தபோய்:

### ஏசுபாபு & உஷா

**துதிக்க:** 23 பேர் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். துவாயி கிராமத்தில் புதிதாக துவங்கப்பட்ட இரவு கூட்டத்தில் சுமார் 20 பேர் கலந்து கொண்டனர். குண்டன்பூர் மற்றும் காக்நெட் கிராமங்களில் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப் பள்ளி நிகழ்ச்சிகளில் இயேசு கிறிஸ்துவை அறியாத அநேக பிள்ளைகள் கலந்துகொண்டு வேத வசனங்கள் மற்றும் பாடல்களை கற்றுக்கொண்டனர். மூன்று நாட்கள் போக்டியில் நடத்தப்பட்ட வாலிபர் முகாமில் சுமார் 380 பேர் கலந்துகொண்டு தங்கள் வாழ்வை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விஷ பூச்சி கடித்ததினால் உதடு வீங்கி கடந்த ஒரு மாதமாக கஷ்டப்பட்டு வரும் கஜிரி பேன் விரைவில் சுகம்பெற; இரண்டு வயது குழந்தையை இழக்கக் கொடுத்துள்ள சைலேஸ் பாய் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; பாம்பு கடியினால் கடந்த இரண்டு மாதங்களாக கால் வீங்கி நடக்க முடியாமல் அவதியுறும் மாணவன் ஹரீஷ் விரைவில் பரிபூரண சுகம் பெற; இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதினால் குடும்பத்தினரால் எதிர்ப்பை சந்தித்து வரும் மஞ்சுளா விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க, குடும்பத்தினரின் இருதயத்தில் தேவன் கிரியைச் செய்ய; வரும் நாட்களில் நடைபெறவிருக்கும் சபை மூப்பர் பயிற்சி, வேதாகம வகுப்புகள் ஆகியவை தடையின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நியாங் ஜங்கய் தெளங் கான் காப்

## மோஸ்தா:

**பால்ராஜ் & கோயில்புஷ்பம்**

**துதிக்க:** 10 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். விசுவாசிகளின் சொந்த ஈகையினால் வசாவா விசுவாசிகளின் மேளா சிறப்பாக நடைபெற்றது. வாகன விபத்தில் சிக்கி சுயநினைவிழந்த ரத்திலால் குடும்பத்தினரின் ஊக்கமான ஜெபத்தினால் நான்கு நாட்களுக்கு பின் சுயநினைவு பெற்று எழுந்தார். மோடெசா சபை மூப்பரின் மகன் பிரின்ஸ் மாநில அளவில் நடத்தப்பட்ட ஓவிய போட்டியில் இரண்டாவது இடத்தை வென்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கை அறுவை சிகிச்சைக்குப் பின் செயலிழந்து காணப்படும் குமினா கிராமத்தின் புதிய விசுவாசி ஜெயந்திபாயின் இடது கை மீண்டும் செயல்பட; விசுவாசி மகேஷின் காணாமல்போன 12-ம் வகுப்பு சான்றிதழ் மீண்டும் கிடைத்திட; சிக்கல் செல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள லதாபேன் மற்றும் சம்பா காக்கி பூரண சுகம்பெற; தானவாடி கிராமத்தில் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியவர்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## கவாண்ட்:

**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** ஐந்து பேர் இயேசு கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். பிராந்திய அளவில் நடைபெற்ற வாலிபர் முகாமில் கலந்து கொண்டவர்களில் நான்கு பேர் தங்கள் வாழ்வை ஊழியத் திற்கென அர்ப்பணித்துள்ளனர். காட்டாமாடி கிராமத்தின் செவ்லிபேனின் தொண்டைக்கட்டி ஜெபத்தினால் மறைந்துவிட்டது. மோர்பியா கிராமத்தைச் சேர்ந்த கட்டாரியாபாயை பாம்பு கடித்ததினால், கடந்த ஒரு மாதமாக (மந்திரவாதியிடம் சென்றும் சுகம் கிடைக்காத நிலையில்) உடல் நிலை மோசமானதால் நமது விசுவாசிகளிடம் சென்று ஜெபித்தபோது பூரண குண மடைந்ணார்; தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த ஜெபக்குழுவினரை எதிர்ப்பாளர்களிடமிருந்து பாதுகாத்த தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகப் பிரச்சனையி லிருந்து அரவிந்த் பாய் சுகம்பெற; மதுவனி கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; மோட்டாபியா கிராமத்தின் லாலாபாய் உடல் முழுவதும் கடும் வலியினால் கடந்த ஏழு ஆண்டுகளாக அவதிப்பட்டு வருகிறார். தற்போது ஆலயத்திற்கு வரும் அவருக்கு தேவன் இரக்கம்பாராட்ட; கரன்ஜிபானி கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழு துவங்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆஸ்நாத் தேவதாஸ்
திருமதி. மார்கரெட் முத்தையா சாமுவேல்
திருமதி. ஜெயா ரூபி சாலமோன்
திருமதி. கிருபாசனம் ஸ்டெல்லா ஆண்ட்ரூஸ்

### செலம்பா:

**யுவனேஷ் & ஜான்சி ராணி**

**துதிக்க:** வசாவா மேளாவில் சுமார் 1500 பேர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பெண்கள் கூடுகை சிறப்பாக நடைபெற்றது. நரம்புத் தளர்ச்சி நோயினால் பாதிக்கப்பட்டிருந்த பாதுபாய் ஊக்கமான ஜெபத்தின் மூலம் குணமடைந்தார். கோர்டா கிராமத்தில் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியவர்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். ராஜேந்திரன் மற்றும் ரமன்பாய் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி சுகவீனமாகி ஊழியம் செய்யமுடியாமல் இருக்கும் சுதேச ஊழியர் ஈஸ்வர் பாய் பூரண சுகம்பெற; இந்த பகுதி யில் அதிகமாக காணப்படும் சிக்கல்செல் அனிமியா பாதிப்புகள் நீங்க; ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்துள்ள ஆஷிஷ் பாய் மற்றும் பிலிப்பாய் தங்களுடைய தீர்மானத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; ஓலிகம், சிக்லி மற்றும் கவ்லிகடா கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

### உம்மர்காம்:

**ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா**

**துதிக்க:** 10 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டுள்ளனர். அங்லாஸ் சபையின் ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. கான்ட்வி, மானிக்பூர், மற்றும் ஜரோலி கிராம சபைகளில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் திரளான மக்கள் கலந்து கொண்டு ஊக்கமாக ஜெபித்தனர். குந்தர் மற்றும் வாபி பகுதிகளில் நற்செய்தி அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தும் சபையில் நடபெறவிருக்கும் மூப்பர் பயிற்சி சிறப்பாக நடைபெற; பெரிய அளிவில் கூட்டங்கள் நடத்த மாவட்ட அதிகாரிகளின் அனுமதி கிடைக்க; இங்குள்ள 40 சபை மூப்பர்களும் தங்களது சபை விசுவாசிகளை சாட்சியின் வழியில் நடத்த; சுதேச ஊழியர்கள் தங்களுக்கென கொடுக்கப்பட்ட ஊழியங்களை சிறப்பாக நிறைவேற்ற ஜெபிப்போம்.

## தாத்ரா & நகர் ஹவேலி

**கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா**

**துதிக்க:** 10 குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கடந்த மாதம் நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில் சுமார் 400 வாலிபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். டோலாரா கிராமத்தில் ஏழு ஆண்டுகளாக பிசாசின் பிடியினால் கஷ்டப்பட்டு வந்த அனிதா ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு வருடங்களாக ஒவ்வாமை நோயினால் கஷ்டப்பட்டு வரும் வாசோனா கிராமத்தைச் சேர்ந்த தம்மனாவுக்கு தேவன் பரிபூரண சுகமருளவும், அவர்களது குடும்பம் இரட்சிக்கப்படவும்; கடந்த நான்கு ஆண்டுகளாக மனநிலை பாதிக்கப்பட்டு கவனிப்பாரற்ற சூழ்நிலையிலுள்ள 15 வயது பங்குபாய்க்கு தேவன் அற்புதம் செய்ய; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள தாவ்லே பாய், ரீதா பென், ரமேஷ் பாய், கிரண், சாந்திலி பேன் ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; உடல் வீக்கம் மற்றும் செரிமான கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ள ரமணிபேனுக்கு தேவன் பரிபூரண சுகம் தர ஜெபிப்போம்.

## 26 ஜனவரி
### ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் தினேஷ் G.M.

**ராந்தா விடுதி: மார்குஸ் மால்தோ & சாரா, சந்திரிகாபேன், மனிஷா லக்ரா**

**துதிக்க:** பருவ கால நோய்களினால் பாதிக்கப்பட்ட விடுதிப்பிள்ளைகளை தேவன் குணப்படுத்தினார். அனைத்துப் பிள்ளைகளும் தேர்வுகளை நன்றாக எழுதியுள்ளனர். 40 பிள்ளைகள் இசைப் பயிற்சி பெற்று வருகின்றனர். நமது விடுதிக்கு அவசியமான தொழிலாளர் வரிசான்றிதழ் கிடைக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படும் சிறப்பு வகுப்புகளின் மூலம் அவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற; கடுமையான குளிர் காலத்தில் தேவன் அனைத்து பிள்ளைகளுக்கும் நல்ல சுகமும், பாதுகாப்பும் அருள; விடுதியிலிருந்து வெளியே சென்று படிக்கும் கல்லூரி மாணவர்கள் சாட்சியாய் வாழ்ந்து படிப்பிலும், ஆவிக்குரிய வாழ்விலும் தங்களை பாதுகாத்துக்கொள்ள ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

**சோப்டா & சாங்வி விடுதி: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்**

**துதிக்க:** 10 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபையில் இணைந்துள்ளனர். சாங்கி மாணவர் விடுதிக்கு அர்ப்பணமுள்ள வார்டன் கிடைத்துள்ளார். நடந்து முடிந்த வாலிபர் முகாமில் அநேகர் கலந்து கொண்டு கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ தங்களை ஒப்புக்கொடுத்துள்ளனர். விடுதி மாணவர்கள் தங்கள் தேர்வுகளை சிறப்பாக எழுத தேவன் கிருபை செய்தார். நீண்ட நாட்களாக நிலவி வந்த எதிர்ப்பு நீங்கி வடோலா கிராமத்தில் புதிதாக இரவு கூட்டம் துவங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகாதேவ் கிராமத்தில் எதிர்ப்பினால் அடிக்கடி தடைப்படும் ஆராதனை தடையின்றி தொடர்ந்து நடைபெறவும், எதிர்ப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும்; கஞ்யாபாடா கிராமத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் நமது விசுவாசிகளின் நிலங்களை அபகரிக்க முயற்சி செய்து வரும் எதிர்ப்பாளர்கள் தேவனால் சந்திக்கப்பட; படிப்பில் மிகவும் பின்தங்கியுள்ள பிரகாஷ், சந்தீப், ஆகாஷ் மற்றும் அருண் ஆகியோருக்கு தேவன் ஞானம் அருள ஜெபிப்போம்.

### தடைகளை உடைத்தெறிந்த ஜெபம்

*மஹாராஷ்டிரா மாநிலம், சித்தாரா பணித்தளத்தின் வடோலா கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க முயற்சி எடுக்கும் போதெல்லாம் அந்த பகுதியின் பஞ்சாயத்து தலைவர் தீவிரமாக எதிர்ப்பை காட்டி ஊழியரை தடுத்து வந்தார். அவரின் மன மாற்றத்திற்காக விசுவாசிகள் தொடர்ந்து ஜெபித்து வந்தனர். சிறிது நாட்களில் அந்த பஞ்சாயத்து தலைவர் சுகவீனப்பட்டு படுத்தபடுக்கையானார். பல இடங்களுக்குச் சென்று சிகிச்சைப் பெற்றும் சுகம் கிடைக்காத நிலையில் நமது விசுவாசிகளை அழைத்து ஜெபிக்க வேண்டினார். விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்ட தேவன் அவருக்கு சுகமருளினார். தற்போது கிறிஸ்தவர்கள் ஜெபக்கூட்டம் நடத்தலாம் என்றும் அதற்கு யாரும் தடைசெய்யக்கூடாது என்றும் ஊரைக் கூட்டி அறிவித்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பித்திகா பிபாபா பானி

### மாஷாவட்:

### பரணிதரன் & செல்வராணி

**துதிக்க:** பிரிம்கால், ராம்பூர், லிம்பாடி மற்றும் கன்சாய் கிராமங்களில் நற்செய்தி அறிவித்து, கூட்டங்கள் நடத்த தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். மூன்று இடங்களில் பெண்களுக்கான சிறப்பு கூடுகை நடத்தப்பட்டன. 9 கிராமங்களில் பின்தொடர் பணி செய்ய தேவன் கிருபை செய்தார். பக்கத்து நிலத்துக்காரரின் வற்புறுத்தல் மற்றும் பயமுறுத்தலுக்கு இணங்காமல் பூஜை புனஸ்காரம் செய்யாமல் ஜெபத்திலே தரித்திருந்து நல்ல விளைச்சலைக் கண்ட சாந்தியின் விசுவாசத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மூன்று முறை அறுவை சிகிச்சை செய்தும் கண்பார்வை சரியாகாமல் கஷ்டப்படும் பாஹா பாய்க்கு தேவன் பூரண சுகமருள; 12 வருடங்களாக குழந்தையின்றி தவிக்கும் கீதாவிற்கு தேவன் இரக்கம்பாராட்ட; ஜெகதீஸின் மகன் பிறந்த நாளிலிருந்து பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளான். தேவன் அற்புதம் செய்ய; கொடும்பன்கனி கிராமத்தில் நமது விசுவாசிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் மக்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும், விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.

### மோல்கி:

### ரூபன் டுடு & ருக்மணி ஹெம்ரோம்

**துதிக்க:** ஒருவர் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். இரண்டு கிராமங்களில் சுமார் 820 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரோட்டி கிராமத்தைச் சேர்ந்த பிகா தாதா பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். கீழே விழுந்ததினால் தலையில் காயம் ஏற்பட்டு மனநிலை பாதிக்கப்பட்டிருந்த கினியர்பாரி கிராமத்தைச் சேர்ந்த கார்டியா தாதாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். தொடர் ஜெபத்தின் மூலம் புடா தாதா பக்கவாதத்திலிருந்து குணமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மருந்தகம் (பார்மசி) படிப்பு படித்து வரும் நமது சுதேச ஊழியர் காலுசிங் தாதாவின் மகள் லௌத்தாபாய் வெற்றிகரமாக படிப்பை முடித்து, நல்ல வேலையில் சேர; மூன்று மாத கர்ப்பிணியாயிருக்கும் நமது ஊழியரின் மனைவிக்கு நல்ல ஆரோக்கியத்தையும், குழந்தை ஆரோக்கியமாய் வளரவும் தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

### நேர்: மூர்த்தி & பாரதி

**துதிக்க:** வாடி மற்றும் சவுகான் கிராமங்களில் புதிதாக ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட்டுள்ளது. மஷாத் மற்றும் வாஸ்மர் கிராமங்களில் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிபோன இரண்டு குடும்பங்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். ஆனந்த்கேடா, அக்லாட், புர்சாத், வாடி மற்றும் லோன்கேடி ஆகிய ஐந்து கிராமங்களில் நடைபெற்ற இயேசு திரைப்பட நிகழ்ச்சிகளை கர்த்தர் ஆசீர்வதித்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு திரைப்படத்தைப் பார்த்த புர்சாத் மற்றும் லோன்கேடி கிராம மக்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வேலை நிமித்தம் புலம் பெயர்ந்து சென்றுள்ள விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்து நிற்க; சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட சிறுவர்கள் மூலம் அவர்கள் பெற்றோரும் இயேசுவின் அன்பினால் தொடப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜங்கோலுன் தௌதாங்
திருமதி. ஸ்டெஃபி பிஜு லால்
திரு. பாருட் பிரதாப் மாங்யா

## போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** மூன்று பேர் இயேசு கிறிஸ்துவில் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். டபசியா, ஜமானியபானி கிராமங்களில் நடத்தப்பட்ட பஜன் கூடுகையின் மூலம் சுமார் 340 பேர் சுவிசேஷத்தை அறிந்து கொண்டனர். விக்ரன், அப்சிங்பாடா, ஜெய்ஸ்பூர், ராம்புரா, பிரதான்தேவி மற்றும் பார்சிபாடா கிராமங்களில் செய்யப்பட்ட பின்தொடர் ஊழியத்தின் மூலம் சுமார் 420 பேர் சந்திக்கப்பட்டுள்ளனர். உமர்டா சபையில் நடைபெற்ற விசுவாசிகளின் முகாமில் கலந்து கொண்ட 150 பேருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள ஜீவன் பாய் மற்றும் டின்ஷியா பாய் பூரண விடுதலை பெற; போரடி கிராமத்தைச் சேர்ந்த சுமி மற்றும் ஜுனபானி கிராமத்தைச் சேர்ந்த ஜெப பாய் மனநல பாதிப்பிலிருந்து சுகம்பெற; போபானி கிராமத்தைச் சேரந்த கல்பனா மற்றும் கொடிடா கிராமத்தைச் சேர்ந்த ரோஷனியின் புற்று நோய் கட்டிகள் மறைய; சிறுநீரக கல் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள சுக்காலிபாய் மற்றும் திலிப் பாய்க்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

## சாலீஸ்காவ்:

### ஏசுபிரகாஷ் & சுனந்தாபெல்லி

**துதிக்க:** மூன்று புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதின் மூலம் சுமார் 320 பேர் முதன்முறையாக நற்செய்தி கேட்டுள்ளனர். ஐந்து பேர் புதிய ஏற்பாடு பெற்றுச் சென்றுள்ளனர். பின்தொடர் ஊழியம், வேதாகம வகுப்புகள் மற்றும் சிறிய ஜெபக்குழுக்கள் தடையின்றி நடைபெற தேவன் கிருபை செய்தார். சாம் பாவர் மற்றும் ஜோதிபாய் பக்கவாதத்திலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். ஜோதி சிந்து, சாய் ஆகியோருக்கு ஒவ்வொமை நோயிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் பிடியிலிருந்து புஜா லோகன்டே விடுதலை பெற; மனநிலை பாதிப்பிலிருந்து மங்கல்பாய், மஹிமா மற்றும் ஆஸ்துமா நோயிலிருந்து வூக்கா பாய் ஆகியோர் பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.

## பிம்பள்நேர், சிர்னிபாடா, சாக்ரி:

### பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஸ்வரி

**துதிக்க:** மால்பாடா ஆலயம் மீண்டும் நமது இயக்கத்திற்கு கிடைக்க தேவன் கிருபை செய்தார். நான்கு கிராமங்களில் சுமார் 2500 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப் பட்டுள்ளது. விஜய்பூர் கிராமத்தில் மாதம் ஒருமுறை கூடும் ஜெபக்கூடுகை துவங்கப் பட்டுள்ளது. ரோஹோட் கிராமத்தில் நான்கு குடும்பங்கள் புதிதாக ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். தாய்பேன் பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போர்கேடா மற்றும் கலாம்பீர் கிராமங்களில் புதிய ஜெபக்குழுக்கள் துவங்கப்பட; விஜய்பூர் சபையில் வாலிபர் ஜெபக்குழு துவங்கப்பட; இரத்தப் புற்றுநோயிலிருந்து லக்கன், நீரிழிவு நோயிலிருந்து 12 வயது சுமித் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; நான்கு வயதாகும் கௌதம்க்கு பேசும், கேட்கும் திறனை தேவன் அருள; விஜய்பூர் கிராமத்தைச் சேர்ந்த பக்கராம் அஹிரே குடும்பம், ரோஹோட் கிராமத்தைச் சேர்ந்த புத்தா, ஜெயவந்தி பென், கேசர் பென் ஆகியோர் இரட்சிக்கப்பட; மாவ்ஜிபாடா, கோலேபாடா, அஷ்டனே, பக்ருன் மற்றும் வாக்கி கிராமங்களில் ஊழியம் துவங்க தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.




### எட்டப்பள்ளி: பாபுஜி முர்மு & வைலட் ஹன்ஸ்தா

**துதிக்க:** ஆறு பேர் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட்டு அவரின் மந்தையில் இணைந்துள்ளனர். மூன்று இடங்களில் நடத்தப்பட்ட தேடுவோர் முகாமில் திரளானோர் பங்கு பெற்று நற்செய்தி கேட்டனர். புஸகே கிராமத்தைச் சேர்ந்த தல்சுலெகாமை விஷப் பாம்பு கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். ஜீவாங்கட்டா கிராமத்தைச் சேர்ந்த அஸ்வினி ஹிச்சாமிக்கு வயிற்றிலிருந்த கட்டி மருத்துவ உதவி மற்றும் ஜெபத்தின் மூலம் சுக மானதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பந்தேவாஹி கிராமத்தைச் சேர்ந்த சந்தோஷ் அத்ராம் குடிப்பழக்கத்தி லிருந்து விடுதலை பெற; குடிப்பழக்கத் திற்கு அடிமைப்பட்டு ஆலயத்திற்கு வராம லிருக்கும் தீபக் அலாமி, யேசுதாஸ் கவுடே, சூரஜ் மட்டாமி, பிரேம் கட்டா, ரவி கட்டா, ரோஹித் மட்டாமி ஆகியோரின் இருதயத்தில் தேவன் கிரியைச் செய்ய; இரு கைகளிலும் வீக்கத்தால் அவதியூறும் ரெக்கனார் கிராமத்தைச் சேர்ந்த துல்சா கட்டாவின் தந்தை பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## கர்நாடகா

### முண்ட்காட் & ஷிக்காவ்: நரேந்திரா குமார்

**துதிக்க:** தன்னுடைய இடைவிடா ஜெபத்தினால் பரசுராம் சொந்த வீடு கட்ட தேவன் உதவி செய்துள்ளார். ஜீப் ஊழியத்தின் மூலம் சுமார் 380 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் அநேகர் கலந்துகொண்டு தேசத்திற்காக ஜெபித்தனர். வீட்டைவிட்டு காணாமல் போன சிவப்பா, குடும்பத்தினரின் தொடர் ஜெபத் தினால் நீண்ட நாட்களுக்குப் பின் சுகமாக வீடு திரும்பினார். சாலை விபத்திலிருந்து நசபெல்லாவை தேவன் அற்புதமாய் பாதுகாத்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அரசாங்க வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருக்கும் ராகேஷின் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள சுதேச ஊழியர் சந்தோஷின் வழக்கு விரைவில் முடிக்கப்பட; வீடின்றி தவிக்கும் கவிதாவுக்கு ஏற்ற வீடு கிடைக்க; பெலவீனத்துடன் இருக்கும் நிங்கம்மாவின் ஆரோக்கியத்திற் காகவும், அவரது இரண்டு மகன்களுக்கும் ஏற்ற வேலை வாய்ப்புகள் கிடைக்கவும் ஜெபிப்போம்.

### மருத்துவர்களிலும் மேலான மருத்துவர்

*சத்தீஸ்கர் மாநிலம், கர்கோடா பணித் தளத்தைச் சேர்ந்த சுகுணா ரத்தியாவுக்கு இனம்புரியாத வியாதியின் காரணமாக சரீரம் முழுவதும் வலியினால் அவதியுற்று வந்தார். அநேக வைத்தியம் செய்தும், மந்திரவாதிகளிடம் சென்றும் பலன் கிடைக்காததால் நமது விசுவாசிகளிடம் வேறு சிறந்த மருத்துவர் இருக்கிறாரா என்று விசாரித்தனர். நமது விசுவாசிகள் அவரை ஜெபக்கூட்டத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு சுகுணாவுக்காக விசுவாசிகள் இணைந்து ஊக்கத்தோடு ஜெபித்தபோது அந்நேரமே தேவன் அவருக்கு பூரண சுக மருளினார். இந்த அற்புத சுகத்தின் மூலம் சுகுணாவும், அக்கிராமத்தினரும் தேவனை விசுவாசித்து வருகின்றனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*




**முண்டர்கி: சாமுவேல் பெபர்தா**

**துதிக்க:** சுமார் 140 பேர் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டுள்ளனர். ஹர்ட்ஹள்ளி ஆராதனைக் குழுவிலுள்ள துர்கேஷ் 20 ஆண்டுகளாக பட்ட கடன் பிரச்சனை யிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். புதிய தொடர்பாளர்கள் ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோரஹள்ளி மற்றும் பேனஹள்ளி கிராமத்தினரின் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு, தங்கள் சடங்காச் சாரங்களை விட்டு மெய்யான தெய்வத்தை ஏற்றுக்கொள்ள; தெலுங்கு மொழி பேசும் குஞ்சிகிரி மக்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; அதிக கடன் பிரச்சனையினால் கஷ்டப்படும் நமது விசுவாசிகள் அதிலிருந்து விடுபட; புதிதாக ஆலயத்திற்கு வரும் துர்கேஷ்க்கு எட்டு வருடங்களாக இருக்கும் சிறுநீரக கல் பிரச்சனை நீங்கி சுகம் பெற; மருத்துவத் துறையில் வேலைக்கு முயற்சி செய்யும் ரத்தனா நவீனுக்கு ஏற்ற வேலை கிடைக்க; கிறிஸ்தவ வாலிபர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்கவும், படிக்கும் பிள்ளைகளுக்கு உதவித் தொகை மற்றும் நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்கவும் ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### ரோத்தம்:

**தேபதத்தா லிமா &சோனியா ராணி**

**துதிக்க:** சிறு ஜெபக்குழு தலைவர்கள் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. இரு கிராமங்களில் திரையிடப்பட்ட இயேசு திரைப்படத்தை அநேகர் இறுதிவரை நின்று பார்த்துச்சென்றனர். கிருஷ்ணாபுரத்தில் முதன்முறையாக நடத்தப்பட்ட இரவுக் கூட்டத்தில் அநேகர் கலந்துகொண்டு சுவிசேஷத்தைக் கேட்டனர். தேவரம்மாவின் காலில் குத்திய இரும்புக் கம்பி அறுவை சிகிச்சையின் மூலம் எந்த பாதிப்பின்றி அகற்றப்பட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுகவீனத்தினிமித்தம் நீண்ட நாட்களாக மருத்துவமனையில் இருக்கும் ராஜம்மா விரைவில் சுகம் பெற்று வீடு திரும்ப; கணவனை இழக்க கொடுத்துள்ள பாக்கியம்மாவின் ஆறுதலுக்காக; ஆலயம் வருவதை நிறுத்தியுள்ள சூர்யா, சுப்ரியா நாயுடு, கங்கம்மா, நாகமணி, நரோமியாமா, ரத்னம்மா ஆகியோர் மீண்டும் ஆலய ஆராதனையில் பங்கு பெற்று தேவனோடு ஐக்கியம் கொள்ள ஜெபிப்போம்.

## தேவனால் எல்லாம் கூடும்

*மஹாராஷ்டிரா மாநிலம், எட்டப்பள்ளி பணித்தளத்திலுள்ள ஜிவாங்கட்டா கிராமத்தைச் சேர்ந்த ஆஷிஷ் என்பவர் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு பல மந்திரவாதிகளிடம் சென்றும் சுகம் கிடைக்காத நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவரை காப்பாற்ற இயலாத காரணத்தினால் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி கூறினார். ஆஷிஷின் பெற்றோர் அவரை நமது விசுவாசியின் இல்லத் திற்கு கொண்டுவந்தபோது விசுவாசிகள் அவருக்காக ஒருமனப்பட்டு கூடி ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் அவருக்கு பரிபூரண சுகமருளினார். தற்போது அவர் குடும்பமாக ஆலய ஆராதனையில் தவறாமல் பங்கு பெற்று வருகிறார். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்ரீலதா ஸ்டீபன் ஜெயசீலன்
திரு. பிரதாப் ரஹாங்

**குப்பம்: வெங்கடேசன் & சசிகலா**

**துதிக்க:** மூன்று பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்தனர். இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டுள்ளார். சுமார் 1,110 பேர் முதன்முறையாக நற்செய்தி கேட்டுள்ளனர். நவம்பர் 15ஆம் தேதி கே.டி. பள்ளியிலும், 29ஆம் தேதி சாந்தி புரம் ஆலயத்திலும் சபோஸ் கிறிஸ்மஸ் நடத்தப்பட்டது, இந்நிகழ்ச்சியில் அநேகர் கலந்துகொண்டு கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியினை கேட்டனர். டிசம்பர் 1ஆம் தேதி நடைபெற்ற பணித்தள ஆலய கமிட்டி கூட்டத்தில் 18 சபை மூப்பர்கள் கலந்துகொள்ள தேவன் உதவி செய்தார். கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு 2025 ஆராதனைகள் நடத்த அரசாங்க அனுமதி கிடைக்க செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களிடமிருந்து நமது விசுவாசிகளை தேவன் பாதுகாக்கவும், ஒவ்வொரு கிராமத்திலும் நமது விசுவாசிகளுக்கு இடையூறு விளைவிப்பதோடு, ஆராதனைகள் மற்றும் ஜெபக் கூடுகைகள் நடத்த தடைசெய்வோரை தேவன் சந்திக்க; சாந்திபுரம் மண்டலம், சி. பந்தப்பள்ளி கிராமத்தில் வசிக்கும் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆலய ஆராதனையில் பங்கேற்பதை தடைசெய்யும் உள்ளூர் அரசியல் வாதிகளின் இருதயத்தில் தேவன் கிரியைச் செய்ய; இப்பணித்தளத்தில் நடைபெறவுள்ள அனைத்து ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும், திரளான ஆத்துமாக்கள் அவரின் மந்தையில் இணையவும், எதிர்ப்போர் மனந்திரும்பி இயேசுவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிடவும் ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

**வார்லி மொழிபெயர்ப்புப்பணி:**
**ஆபிரகாம் ஜி. & ஹேமலதா**

**துதிக்க:** தேவனுடைய கிருபையால் வார்லி, நிஹ்ரி மொழியில் ரோமர் நிருபம் முதல் கலாத்தியர் நிருபம் வரை திருத்தப்படவும், திருத்திய பதிவை ஆயத்தப்படுத்தவும் தேவன் உதவி செய்தார்.102 வார்லி பாடல்கள் திருத்தப்படவும், திருத்திய பதிவை ஆயத்தப்படுத்தவும் மேலும் 2 சாமுவேல் புத்தகம் மொழி வல்லுனரால் சரிப்பார்க்கப்படவும் உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டோக்ரி, நிஹ்ரி மொழியில் சங்கீதம், நீதிமொழிகளுடன் கூடிய புதிய ஏற்பாடு அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட; வார்லி மொழியில் மீதியுள்ள 428 பாடல்களும் திருத்தப்பட்டு, திருத்திய பதிவை ஆயத்தப்படுத்தவும், மறுபடியும் பாடல் புத்தகம் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட; மொழி உதவியாளர்களின் தேவைகள் சந்திக்கப்பட, தேவன் அவர்களுக்கு நல்ல சுகபெலன் அருள ஜெபிப்போம்.



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தென் மண்டலம் நடத்தும்
கிதியோனியர் முகாம்
கொண்டாட்டம் 2025
கருப்பொருள்:
...இலக்கை நோக்கி...
பிலிப்பியர் 3:14
அசாம், குஜராத் மாநிலங்களின் ஆத்தும பாரத்தை தரும் பணித்தள பகிர்வுகள் மற்றும் கலாச்சார நடனங்கள் நடைபெறும்
பெரியவர்கள், வாலிபர்கள், இளம் வாலிபர்கள், சிறுவர்கள் அனைவருக்கும் தனித்தனி கூடுகைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது
தொடர்புக்கு:
Rev. G. கிங்ஸ்லி - 9445119789
குடும்பமாக பங்குபெறுங்கள்!
நாள்:
ஜனவரி 14 செவ்வாய் காலை 9:30 மணி முதல்
16 வியாழன் மதியம் 2:00 மணி வரை
இடம்:
போப் கல்லூரி
சாயர்புரம்
பதிவு கட்டணம்:
பெரியவர் ரூ.100
சிறியவர் ரூ. 50




நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
திருவள்ளூர் மண்டலம்
அமைத்து நடத்தும்
Dr. ராஜேஷ் டதி,
Director, Open Gates Ministries, Pune
திருமதி. வசந்தி இம்மானுவேல், FMPB
Dr. D. ஜெகதீஸ் பாண்டியன், I.A.S
Former Chief Secretary, Gujarat
சகோ. மகேந்திரன், மத்திய பிரதேசம்
வாலிபர் முகாம்
Youth Conference 2025
2025 ஜனவரி
14 செவ்வாய் காலை 9.30 மணி முதல்
16 வியாழன் மதியம் 1.00 மணி வரை
கருப்பொருள்
நான் இயேசுவுக்கு வேண்டும்
இடம் இறைவனின் தோட்டம்
சென்றாயன்பாளையம், பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்.
Pre registration link
தொடர்புக்கு
FMPB, 732, AGS Complex, CTH Road, Pattabiram, Chennai -600072, Ph.: 87545 98371, 044-26852200

Regd. Newspaper for India No.17759/69

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

## Steering Committee for Ancillary Needs

### ஸ்கேன் பிரிவு நடத்தும்

இவர்களிலும் அதிகமாய்
யோவான் 21 : 15

# அழகிய சங்கமம் 2025

ஒன்றாய் கூடி வந்தோம்

**வியாபாரம் மற்றும் தொழில் முனைவோருக்கான கருத்தரங்கு**

**நாள் : 2025 – ஜனவரி**

| | |
|---|---|
| **25** சனிக்கிழமை மாலை 4.30 மணி முதல் | **26** ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணி வரை |

**இடம் : ஆபிரகாம் எஸ்தர் ஹால்**
கோடை இன்டர்நேஷனல் ஸ்கூல் அருகில்,
மூஞ்சிக்கல், கொடைக்கானல்

தொழில் வல்லுநர்கள், ஆடிட்டர்களின் கலந்துரையாடல்,
ஆலோசனைகள், மிஷனெரிகளின் பகிர்வு மற்றும் பாடல்கள்.
குடும்பமாய் பங்குபெற அன்புடன் அழைக்கின்றோம்

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***